வருடாந்த அறிக்கை 2019

# முன்னேற்றத்திற்கான வலுவூட்டம்



ශ්‍රී ලංකා සුනිත්‍ය බලශක්ති අධිකාරිය
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை
Sri Lanka Sustainable Energy Authority

# உள்ளடக்கம்

**எம்மைப் பற்றி**


நிலைபெறுதகு வலு அதிகார சபையினைப் பற்றி / 02
தொலைநோக்கு/பணிநோக்கு / 03
கூட்டாண்மை மைற்கற்கள் / 04
தலைவரின் அறிக்கை / 06
பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு / 09
முகாமைத்துவச் சபையின் முகக்குறிப்பு / 12
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் / 13


**ஆண்டிற்கான சிறப்பம்சங்கள்**


செயற்திறன் சிறப்பம்சங்கள் / 16
நிலைபெறுதகு வலு நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள் / 17


**கூட்டாண்மை ஆளுகை**


கூட்டாண்மை ஆளுகை / 20
இடர்நேர்கை முகாமைத்துவம் / 21


**முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு**


வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள் / 24
கேள்வி பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள் / 32
கொடையாளி நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் / 36
மனித வள அபிவிருத்தி / 40
செயல் திட்டம் 2020 / 42


**நிதித்துறைத் தகவல்கள்**


வருமானக் கூற்று / 46
நிதி நிலைமைக் கூற்று / 47
உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று / 48
காசுப்பாய்ச்சல் கூற்று / 49
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் / 50
தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை / 69
கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள் / 80


விஜயம் செய்யவும்
www.energy.gov.lk

எமது வாழ்க்கையின் ஒவ்வொரு தோற்றத்தையும் நீடிப்புத்திறன் தொடுவதனை முன்னிறுத்தும்போது, சுத்தமான பசுமை சக்தியின் முன்னணி அதிகாரசபை என்ற வகையில் எமது பணியானது எப்போதுமில்லாதளவு முக்கியத்துவத்தினை பெறுகின்றது. மீளாய்வு செய்யப்படும் ஆண்டானது முக்கியமான ஒன்றாகக் காணப்படும்வேளை, 2050 இல் ஓர் கரிம நடுநிலையான தேசமாக மாறும் எமது பணிநோக்கமானது எந்த வகையிலும் இறுதியானதல்ல. அதிகமான பணியினை மேற்கொள்ள உள்ளதுடன் மற்றும் ஓர் சுபீட்சமான எதிர்காலம் முன்னால் காணப்படுவதுடன், நாம் முன்னேறுவதற்கு வலுவூட்டப்பட்டுள்ளோம்.

# முன்னேற்றத்திற்கான வலுவூட்டம்

# நிலைபெறுதகு வலு அதிகார சபையினைப் பற்றி

இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசினது பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதுடன் 2007 அக்டோபர் 01 இல் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையானது (இ.நி.வ.அ.ச.) ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கையில் நிலைபெறுதகு வலு புரட்சிக்கு வழிகாட்டுவதற்கு பொறுப்பான ஆளுகை அங்கம் இ.நி.வ.அ.ச. ஆகும். வலுத் தேவைகளை ஓர் பயனுள்ள, வினைத்திறனுள்ள மற்றும் சுற்றுச்சூழல் சாதகமான விதத்தில் சந்திப்பதற்கு வசதியளிக்கக்கூடிய நீடிப்புத்திறன்மிக்க வலு வளங்களை செயல்திறனுடன் இனங்காண்பதற்கு மற்றும் இலங்கை முழுவதும் வலு வினைத்திறனை ஊக்குவிக்கும் ஓர் முக்கியமான நிறுவனத்தினை உருவாக்கும் குறிக்கோளுடன் இது ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கையின் எதிர்கால வளர்ச்சியில் இத்தகைய ஓர் முக்கியமான பகுதியினை கையாளும் ஓர் நிறுவனம் என்ற வகையில், சூரியவலு, காற்று, நீர்மின் மற்றும் உயிரி வலு போன்றவற்றை உள்ளடக்கிய எமது தேசத்தின் செழிப்பான வலு வளங்களது தொடர்ச்சியான அபிவிருத்திக்கு வசதியளிப்பதற்கு நாம் இலக்கு வைத்துள்ளோம். இ.நி.வ.அ.ச. இல், எதிர்காலத்தில் இலங்கையில் சுத்தமான, நீடிப்புத்திறனுடைய மற்றும் உள்நாட்டிலேயே தோற்றுவிக்கப்பட்ட வலுத் தீர்வுகளுக்கு நிலைமாறுதலை மேற்கொள்வதற்கு வழி சமைப்பதற்காக வலுத் துறையில் மூலோபாய முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு நாம் முயற்சிக்கின்றோம். எமது வலு வளங்களை விருத்தி செய்வதற்கு இலக்குவைக்கும் வேளை, நாம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் அறிவுசார் மாற்றல்களுக்கு வசதியளிப்பதற்கும் முயற்சிக்கின்றோம். இது தேசத்தின் நீடிப்புத்திறன்மிக்க வலுத் தேவைகளை சந்திப்பதற்கு புத்தாக்கமான வலுத் தீர்வுகள் மற்றும் செயல்முறைகளை விருத்திசெய்வதற்கு எம்மை இயலுமையாக்கும்.



# நிலைபெறுதகு வலு அதிகார சபையினைப் பற்றி

இலங்கையில் தேசிய மட்டத்தில் நிலைபெறுதகு வலுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கான ஓர் விரிவான நோக்கெல்லை இ.நி.வ.அ.ச. க்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான நோக்கெல்லையின் கீழ், நான்கு பிரதான குறிக்கோள்கள் இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை பின்வருவனவாகும்:

(அ) புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி : வலுப் பாதுகாப்பினை மேம்படுத்தும் நோக்கில் புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை இனங்காணுதல், மதிப்பீடுசெய்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் இதனூடாக நாட்டிற்கு பொருளாதார மற்றும் சமூக நலன்களை பெற்றுக்கொள்ளுதல்.

(ஆ) வலு வினைத்திறன் மேம்பாடு மற்றும் வளம்பேணல்: உள்ளூர், வர்த்தக, விவசாய, போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் ஏதேனும் பொருத்தமான ஏனைய துறையில் வலுவின் பயன்பாட்டிற்காக, வலு வினைத்திறன் மேம்படுத்தல் மற்றும் வலு வளம்பேணல் திட்டங்களை இனங்காணுதல், ஊக்குவித்தல், வசதியளித்தல், அமுல்படுத்தல் மற்றும் முகாமைப்படுத்தல்.

(இ) வலுக் கொள்கை அபிவிருத்தி மற்றும் தகவல் முகாமைத்துவம்: கொள்கை அபிவிருத்தி மற்றும் தொடர்புடைய தகவல்களது பகுப்பாய்வு மற்றும் முகாமைப்படுத்தல் மூலம் நாட்டிற்கான வலு விநியோகத்தின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை மற்றும் செலவுச் செயல்திறன் ஆகியவற்றை ஊக்குவித்தல்.

(ஈ) நிதி முகாமைத்துவம்: தேசத்திற்காக வலுவின் ஆகக் குறைந்த ஆதாய அடக்க விலையுடன் மற்றும் வலுப் பாதுகாப்புடன் இயைபாக அதன் குறிக்கோள்களை அமுல்படுத்துவதற்கு அதிகார சபைக்கு போதுமான நிதி கிடைக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்.



## தொலைநோக்கு

## இலங்கையை சக்திப் பாதுகாப்புடைய ஓர் நாடாக விளங்கச் செய்தல்

## பணிநோக்கு

சிறந்த நிலைபெறுதகு செயன்முறைகளை பின்பற்றி இயற்கை வளங்கள், மனித வளங்கள் மற்றும் பொருளாதார செல்வம் ஆகியவற்றை பாதுகாப்பதன் மூலம் இலங்கை சக்திப் பாதுகாப்பினை அடைவதற்கு வழிசமைக்கும் தேசிய அபிவிருத்திப் பயணத்தில் ஆராய்ச்சி, வசதியளித்தல், ஆய்வு மற்றும் அபிவிருத்தி மற்றும் அறிவு முகாமைத்துவம் என்பவற்றினூடாக சுதேசிய சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சக்தி வளங்களை பாதுகாப்பதற்கும் தேசத்திற்கு அதன் அனைத்து முயற்சிகளிலும் வழிகாட்டுதல்.

# கூட்டாண்மை மைற்கற்கள்

## 2014

- இலங்கையின் சூரிய சக்தி நிலப்படத்தொகுதியினை பிரசுரித்தமை

## 2007

- இ.நி.வ.அ.ச. இனை நிறுவியமை
- 2007 இல் தரம் 6இலிருந்து 11வரை தேசிய விஞ்ஞான பாடத்திட்டத்தில் நீடிப்புத்திறன் வலு பாடத்தின் அறிமுகம்.



**01** உகந்த கொள்கைகளை விருத்திசெய்தல்

**02** புதுப்பிக்கக்தக்க சக்தியின் பங்களிப்பினை அதிகரித்தல்

## 2010

- விதுல்கா கண்காட்சி + கருத்தரங்கு + தேசிய சக்தி வினைத்திறன் விருதுகளை ஆரம்பித்தமை
- முதலாவது கட்டாய வலு சிட்டையிடப்பட்ட தயாரிப்பு - கையடக்க ஒளிர் விளக்கு
- கூரை மீதான வலு உற்பத்திற்கு தேறிய மீட்டர் முறையின் ஆரம்பம்.

## 2011

- பாடசாலை வலு சங்கங்களின் அறிமுகம்
- அம்பாந்தோட்டையில் மின்தொகுப்புடன் இணைக்கப்பட்ட முதலாவது 1.237 MW சூரிய சக்தியின் இயக்கம்

## கூட்டாண்மை மைற்கற்கள்

# 2015

- கொள்கை இலக்கினை எட்டிய, புதிய புதுப்பிக்கத்தக்க சக்தியிலிருந்து மின் உற்பத்தியின் 10% பங்களிப்பினை அடைந்தமை

# 2016

- தேறிய மீட்டர் திட்டத்தினை மேம்படுத்தும், கூரை சூரிய சக்தி உருவாக்கத்திற்காக சூரிய பல சங்கிராமய திட்டத்தின் ஆரம்பம்.

# 2018

- சூரிய பல சங்கிராமய திட்டத்தின் கீழ் கூரை சூரிய சக்திக்கு நிர்ணயிக்கப்பட்ட 100 MW இலக்கினை எட்டியமை
- UNDP/FAO/GEF இன் நிலைபெறுதகு உயிர்த்திரள் சக்தி திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவுசெய்தமை



03 சக்தி வினைத்திறனை மேம்படுத்தல்

04 மக்களுக்கு வலுவளித்தல்

# 2017

- 10 உந்துகை திட்டங்களுடன் DSM செயற்பாட்டில் ஓர் ஜனாதிபதி பணிப்பிரிவினை நிறுவியமை

# 2019

- இலங்கையின் தேசிய வலுக் கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களை வர்த்தமானியிட்டமை
- இலங்கையில் நீடிப்புத்திறனுடைய வலுவுடைய வதிவிடங்களுக்கான வழிகாட்டியினை பிரசுரித்தமை
- UNDP/FAO/GEF இன் வலு NAMA திட்டத்தினை நிறைவுசெய்தமை

# தலைவரின் அறிக்கை



”

எமது நடவடிக்கைகளில் சிறந்த வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்பாண்மையினையும் உருவாக்குவதற்காக இ.நி.வ.அ.ச. ஆனது ஓர் தொடரான உள்வாரி மற்றும் வெளிவாரி செயல்முறைகளை அமைத்தும் மற்றும் நடைமுறையிலுள்ள செயல்முறைகளை மீள்கட்டமைப்பு செய்தும் உள்ளது.

**எமது முன்னிறுத்தலானது முதலீட்டாளர்களை வரவேற்று அவர்களது புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்கும், செயல்முறைப்படுத்தி மற்றும் அமுல்படுத்துவதனையும் மேற்கொள்ளும் ஓர் நிறுவனமாக விருத்தி செய்வதாகும்.**

# தலைவரின் அறிக்கை

## வலு ஆற்றலுடைய இலங்கையை நோக்கி

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) தலைவர் பதவியானது 2019 இல் எனக்கு ஒப்படைக்கப்பட்டது. எனது தலைமைத்துவத்தின் கீழ் இ.நி.வ.அ.ச. இனை ஓர் திட்ட அங்கீகார மற்றும் திட்ட முகாமைத்துவ அதிகார சபையிலிருந்து புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தியில் ஓர் புத்தாக்கமான, நடைமுறை சார்ந்த மற்றும் பங்கேற்புடைய நிறுவனமாக மாற்றுவதில் நாம் வெற்றிகண்டோம். எமது பிரதான குறிக்கோள்கள்களாக நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலு சாத்தியத்தினை இனங்கண்டு மற்றும் திட்டமிடுவதற்கு நிபுணத்துவத்தினை கொண்டுவருவதும் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலு பூங்காக்களை விருத்திசெய்வதற்கு சாத்தியமான வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவருவதும் ஆகும்.

நவம்பர் 2016 இல் பாரிஸ் உடன்படிக்கையில் கையொப்பமிட்டவராக இலங்கை தேசிய ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளை (தே. தீ.ப.) சந்திப்பதற்கு ஓர் கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. இந்த இலக்குகளை அடைவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள ஓர் முன்னணி நிறுவனமாக, எனது தலைமைத்துவத்தின் கீழ் முகாமைத்துவச் சபையானது ஓர் வரைபடத்தினை தயாரித்து சில முக்கிய முன்னோடித் திட்டங்களின் அபிவிருத்தியினை முன்னெடுத்தது. இதில் முதலாவதாக மொனராகல, சியம்பலந்துவவில் 100 மெகா வாட் சூரியவலு பூங்காவும் இரண்டாவதாக பூநகரி தீபகற்பத்தில் காற்று மற்றும் சூரியசக்தி வலு பூங்காவும் ஆகும் என்பதுடன் இது 180 மெகா வாட் சூரியவலு சக்தியினையும் 240 மெகா வாட் காற்று சக்தியினையும் வழங்கும்.

## சவால்களை வெற்றிகொள்ளல்

இவ்வாண்டில், நிலைபெறுதகு வலு அதிகார சபையானது அதன் முன்னேற்றத்தினை மந்தமாக்கிய பல சவால்களை வெற்றிகொண்டது. இவற்றுள் பல சட்ட விடயங்கள் காணப்பட்டன. சட்ட விடயங்களை தீர்ப்பதற்காக, இலங்கை பொதுப் பயனீடுகள் ஆணைக்குழு (இ.பொ.ப.ஆ.), இலங்கை மின்சார சபை (இ.மி.ச.), சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற பங்காளிகளை பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் முன்னால் கொண்டு வந்து இந்த வெற்றி ஈட்டப்பட்டது.

ஏனைய பிரிவுகளிலான நடவடிக்கையாக, நாம் மொரட்டுவ, பேராதெனிய, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களிலிருந்து பேராசிரியர்களை இ.நி.வ.அ.ச. இன் ஆலோசனைக் குழுவிற்கு கொண்டு வருவதற்கு இயலுமையாயிருந்தது. இவர்களது நிபுணத்துவத்துடன் புத்தாக்க வலு அபிவிருத்திக்கு சாத்தியமான பகுதிகளை விரிவாக இனங்காண்பதற்காக வழக்கமான கூட்டங்களும் கருத்தரங்குகளும் ஒழுங்குசெய்யப்பட்டன. இதன் பயனாக முழுமையான புதுப்பிக்கத்தக்க வலு வளங்களது வரைபடங்கள் வரையப்பட்டு இவை அமைச்சரவை அமைச்சர்களது அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பின்னர், இ.நி.வ.அ.ச. இடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஓர் சட்ட கடப்பாடாக, வர்த்மானியிடப்பட்டது.

நிர்வாக முகப்புகள், நிதி மற்றும் பொறுப்புக்கூறல் முகப்புகளில் காணப்பட்ட பளுவான நிறைவேறா பணித்தொகுதிகளை நாம் நிறைவேற்றினோம். வருடாந்த அறிக்கைகள், கணக்காய்வு மற்றும் இ.நி.வ.அ.ச. சட்டரீதியாக பின்பற்றுவதற்கு கடப்பாடுடைய ஏனைய பகுதிகளில் காணப்பட்ட நிறைவேறா பணித்தொகுதிகளை நாம் சரிசெய்தோம். புத்தாக்கமுடைய வலுத் துறையில் விதிக்கப்பட்ட பல கொள்கை, முறைமைப்படுத்தல் மற்றும் அதிகாரப்போக்குடைய சவால்களுக்கும் இ.நி.வ.அ.ச. முகங்கொடுத்தது. இந்த தடைகளை இனங்கண்டு மற்றும் தீர்ப்பதற்காக நாம் முகாமைத்துவச் சபையில் பல முன்னெடுப்புகள் மற்றும் முயற்சிகளை மேற்கொண்டோம். சபையானது அனைத்து பொருத்தமான அமைச்சுக்களின் செயலாளர்களை உள்ளடக்கியிருப்பதனால், இ.நி.வ.அ.ச. ஆகக் குறைந்த முடக்கங்கள் மற்றும் தாமதங்களுடன் செயலாற்றக்கூடியதாயுள்ளது.

இவ்வாண்டில், பாரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் அதிகளவு தாக்கத்தை உடைய காணி கையகப்படுத்தல் விடயங்களை தீர்த்து வைத்தல் போன்ற பிரிவுகளிலும் நாம் முன்னிறுத்தலை மேற்கொண்டோம். அத்துடன், 2030 க்கான எமது புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளை அடைவதற்கு தடையாகவுள்ள புதுப்பிக்கத்தக்க வலு கட்டண பிணக்குகளுக்கான பரிகாரங்களையும் நாடினோம்.

## வாய்ப்புக்களை உருவாக்குதல்

இ.நி.வ.அ.ச. ஆனது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து அமெரிக்க டொலர்கள் 50 மில்லியன் கடன் திட்டத்தினை வெற்றிகரமாக பெற்று பயன்படுத்தும் புதிய வாய்ப்புக்களையும் உருவாக்கியது. இவை பிரதானமாக நகரப்புற குடும்பங்களுக்கு 8% குறைவான வட்டி வீதத்தில் கூரைமீதான சூரியவலுத் திட்டங்களுக்கு வசதியளிப்பதற்காகும் என்பதுடன் புதுப்பிக்கத்தக்க வலுத் துறையின் வளர்ச்சிக்காக நடைமுறையிலுள்ள குறைவாக பயன்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள் விரிவாக்கப்பட்டன.

எனது தலைமைத்துவத்தின் கீழ், இ.நி.வ.அ.ச. ஆனது கொரிய வலு அதிகார சபையுடன் (கொ.வ.அ.ச.) ஈடுபாடு கொண்டு கலந்துரையாடல்கள் மற்றும் கற்கை சுற்றுலாக்கள் ஊடாக பின்வருவனவற்றில் அறிவு மற்றும் நிபுணத்துவத்தினை பெறக்கூடியதாயிருந்தது. சூரிய வலுவினைப் பயன்படுத்தி மின்கலன் சேமிப்பு அபிவிருத்தியுடன் சூரியவலு/மின்வலு மின்னேற்ற நிலையங்களுடன் மின்கலனால் வலுவளிக்கப்படும் வாகன அபிவிருத்தி என்பவையாகும். கொ.வ.அ.ச. ஆனது சூரியவலு மின்கலனால் வலுவளிக்கப்படும் மூன்று முச்சக்கர வாகனங்களையும் ஓர் சூரியவலு மின்னேற்ற நிலையமொன்றையும் கொடையாக வழங்கியது. இது சூரியவலு மின்கலன் வலுவளிக்கப்பட்ட முச்சக்கர வாகனங்கள் துறையினை அறிமுகப்படுத்தி அபிவிருத்திசெய்வதற்காகும். மேற்குறிப்பிடப்பட்ட மின்னேற்ற நிலையம் மற்றும் முச்சக்கர வண்டிகள் கொழும்பு BMICH இல் காட்சிப்படுத்துவதற்காகவும் பயன்படுத்துவதற்காகவும் என்னால் நிறுவப்பட்டன.

## புத்தாக்கங்களின் அறிமுகம்

இவ்வாண்டில் நாம் மேலதிக வலுவினை சேமித்து வைப்பதற்கு உதவும் வதிவிட கூரைமீதான சூரியவலு திட்டங்களுக்கான சூரியவலுவினால் மின்னேற்றப்படும் மின்கலன்களுக்கான சாத்தியத்தின் மீது கற்கையினை மேற்கொண்டோம். தனிமைப்படுத்தப்பட்ட கிராமங்களில் மற்றும் தீவுகளில், பிரதானமாக இலங்கையின் வடபகுதியில் பிரதான மின்தொகுப்பிற்கு இணைக்கப்பட்ட செலவுமிக்க மின்செலுத்தத்தொடருக்கு ஓர் மாற்றீடு தீர்வாக சூரியவலு சக்தியினை அறிமுகப்படுத்தி வழங்குவதற்கான கற்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

சூரியவலு சக்தி வளங்களை மிகையாக்குவதற்காக இ.நி.வ.அ.ச. பாரிய நீர் மின்வலுத் திட்டங்களின் நீர்தேக்கங்களின் மேல்

# தலைவரின் அறிக்கை

சூரியவலு பலகங்களை மிதக்கவிடுவதன் நன்மைகளை ஆராய்வதற்கு முயற்சித்தது. இந்த மிகையாக்கலானது ஒரே மின்செலுத்தத்தொடரினூடாக பகல் பொழுதில் மிதக்கும் பலகங்களிலிருந்து சூரியவலு சக்தியினை பயன்படுத்தவும் இரவு வேளைகளில் நீர்மின்வலு உருவாக்கத்தினை பயன்படுத்தவும் வசதியளிக்கும். இந்த முயற்சியானது நீர்தேக்கங்களிலுள்ள நீரில் ஆகக்குறைந்தது மூன்றில் ஒரு பங்கினை பாதுகாப்பதற்கு துணைபுரிவதுடன், வறட்சிக் காலத்தில் மற்றும் / அல்லது விவசாய தேவைகளுக்காக நீர் சேமிக்கப்படுவதுடன் வலுப் பாதுகாப்பினையும் வழங்கும்.

பாரிய நீர்மின்வலுத் திட்டங்களில் நீரை மீள்பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய நலன்களிலும் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது மின்வலு உருவாக்கத்தின் பின்னர் பணிவான நீர்தேக்கத்திலிருந்து உயர்வான நீர்தேக்கத்திற்கு நீரை மீள்நிரப்புவதற்கான நேர்மாறான இறைத்தல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி மேற்கொள்வதாகும். இ.நி.வ.அ.ச. ஆனது தனிப்பட்ட வீடுகளில் மின்கல சேமிப்பு முறையினை பயன்படுத்தி மின்தடை நேரங்களில் வீட்டார் கூரைமீதான சூரியவலு சக்திகளை பயன்படுத்துவதனை ஆராய்வதற்கும் முயற்சிக்கின்றது. இவ்வசதியானது இலங்கையில் தற்போது பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

### பொறுப்பாண்மை

எமது நடவடிக்கைகளில் சிறந்த வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்பாண்மையினையும் உருவாக்குவதற்காக இ.நி.வ.அ.ச. ஆனது ஓர் தொடரான உள்வாரி மற்றும் வெளிவாரி செயல்முறைகளை அமைத்தும் மற்றும் நடைமுறையிலுள்ள செயல்முறைகளை மீள்கட்டமைப்பு செய்தும் உள்ளது. எமது முன்னிறுத்தலானது முதலீட்டாளர்களை வரவேற்று அவர்களது புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்கும், செயல்முறைப்படுத்தி மற்றும் அமுல்படுத்துவதனையும் மேற்கொள்ளும் ஓர் நிறுவனமாக விருத்தி செய்வதாகும். புதிய திட்டங்களுக்காக மாறி மாறி வரும் ஊக்குவிப்புகளை ஒழுங்குபடுத்தி அறிமுப்படுத்துவதனூடாக இதனை நாம் வெற்றிகரமாக அடைந்துள்ளோம் என்பதை பகிர்வதில் நான் மகிழ்சியடைகின்றேன். இது வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து மிகவும் சிறப்பான வரவேற்பினை பெற்றது.

மிகவும் குறிப்பிட்டவகையில், அங்கீகரிக்கப்பட்டு ஆனால் இணங்கியொழுகுவதற்கும் நிறைவுசெய்வதற்கும் தவறும் சூரியவலுத் திட்டங்கள் எதிர்காலத்தில் தண்டிக்கப்படும். இது மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கையுடன் (மி.கொ.உ.) இறுதி அங்கீகாரக் கட்டத்தில் மின்தொகுப்புடன் இணைக்கும் வசதிக்கு ஒதுக்கீடு செய்யும் கிரயத்திற்கு எதிராக திட்டத்தின் பெறுமதியில் 20% வைப்பினை பெற்றுக்கொள்வதன் மூலம் அமுல்படுத்தப்படும். இந்த வைப்பானது பின்னர் இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படும். திட்டமானது 50% பூர்த்தியினை அடையும்போது முதலாந் தவணையாக 10% வைப்பானது விடுவிக்கப்படும். எஞ்சிய வைப்பானது திட்டம் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்படும். இந்த புதிய வழிகாட்டிகள் இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களை பொறுப்பேற்க விரும்பும் உண்மையான முதலீட்டாளர்களை ஊக்குவித்து பாதுகாக்கும். இந்த புதிய வழிகாட்டிகள், திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்கள் பூர்த்திசெய்வதற்கான ஓர் காலக்கெடுவினை வழங்கவேண்டிய அவசியத்தினையும் குறிப்பிடும். முன்மொழியப்பட்ட காலக்கெடுவினுள் பூர்த்தி செய்யாதவர்கள் அவர்களது வைப்பினை இழப்பதுடன் மின் இணைப்பு வசதியினையும் இழந்துவிடுவார்கள். தற்போது இ.நி.வ.அ.ச. ஆனது இந்த வழிகாட்டிகளை அமுல்படுத்துவது நோக்கி செயலாற்றுகின்றது.

### எதிர்பார்ப்பு

எமது மத்திய மற்றும் நீண்டகால இலக்காக பின்வருவன காணப்படுகின்றன. இலங்கை பாரிஸ் உச்சிமாநாட்டில் உறுதிசெய்த இலக்குகளை அடைவதற்காக, 2030 அளவில் 30-35% புதிய புதுப்பிக்கத்தக்க வலுவினை விருத்திசெய்தலும் 2050 அளவில் 50% அடைவதும் ஆகும். இலங்கை தற்போது இந்த இலக்குகளை எட்டாது மத்திய காலப்பகுதியில் 23% ஆன புதிய புதுப்பிக்கத்தக்க வலுவினையே அடைந்துள்ளது. புதிய காற்று, சூரியவலு மற்றும் உயிர்க்கூள திட்டங்கள் ஆய்வுசெய்யப்படுவதுடன், இலங்கையானது பாரிஸ் உச்சிமாநாட்டின் இலக்குகளை அடைவதற்கான பாதையில் திரும்பும் என நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்.

வீட்டுப் பாவனைக்கு சூரியவலு சக்தியினை பயன்படுத்துவதற்கு அனேகமான குடியிருப்பாளர்கள் தெரிவுசெய்வதானது புதுப்பிக்கத்தக்க வலுவிலான உலகளாவிய போக்குகள் ஓர் ஆசீர்வாதமாக காணப்படுகின்றது. நகர்புற குடியிருப்பாளர்கள் மற்றும் கிராமிய பொது இடங்களான பாடசாலைகள் மற்றும் வணக்க ஸ்தலங்களில் அவர்களது சொந்த வலுத் தேவைகளுக்கான சூரியவலு மின்கல தொழில்நுட்பத்தை பயன்டுத்துவதனை நாம் ஊக்குவிக்க விரும்புகின்றோம்.

தன்னிறைவான புதுப்பிக்கத்தக்க வலுவினை விருத்திசெய்தல் என்பது நான் எதிர்வரும் வருடங்களில் விருத்திசெய்வதற்கு மிகவும் வாஞ்சையுள்ள ஓர் பகுதியாகும். இது விவசாயம், கல்வி, கிராமிய கைத்தொழில்கள் மற்றும் உள்ளூர் பொருளாதார வலுவளிப்பிற்கு மிகவும் நன்மை பயக்கும்.

### பாராட்டுதல்

இறுதியாக, பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாட்களுக்கு இலங்கையில் ஓர் நிலைபெறுதகுமிக்க வலுக் கலாச்சாரத்தினை விருத்திசெய்வது நோக்கிய அவர்களது கடப்பாட்டிற்கும் கடுமையான உழைப்பிற்கும் நான் எனது மனமார்ந்த நன்றிகளை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.



**டி.எம்.ஆர். பங்ஸ ஜயா**
தலைவர்

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு



"2020 இல் இலக்குவைக்கப்பட்ட 200 மெகா வாட் கூரை மீதான சூரிய மின்வலு இலக்கினை 2019 இல் நாம் அடைந்தோம். 2020 ஆண்டிற்கான இலக்குகளை 2019 மே மாதத்தில் அடையக்கூடியமையானது ஓர் பாரிய சாதனையாகும் என்பதுடன், இதற்கு இத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான அதிகார சபையின் முன்னெடுப்பு காணப்பட்டது. இது எதிர்வரும் ஆண்டிற்கான எமது எதிர்கால புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளுக்கு முன்னாடியாக எம்மை நிறுத்தியுள்ளது.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

## சாதனைகளும் வாய்ப்புக்களும் நிறைந்த ஓர் ஆண்டு

2019 ஆம் ஆண்டானது நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு ஓர் முக்கியமான ஆண்டாகும். பாரிஸ் உச்சிமாநாட்டின் கடப்பாடுகளை சந்திப்பதற்கு தயாராகும்வேளை எமது சொந்த தேசிய புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளை அடைவதற்கான பொறுப்பும் காணப்படுகின்றது.

இவ்வாண்டில் அதிகார சபைக்கு காணப்பட்ட முக்கிய சவால்களுள் ஒன்றாக பசுமையில்லா வாயு வெளிப்பாட்டினை குறைப்பது நோக்கிய எமது கடப்பாடு காணப்படுகின்றது. அதிகார சபையானது இந்த இலக்குகளின் அனேகமானவற்றை அடைவதில் எதிர்பார்ப்பிலும் பார்க்க அதிகமாக செயலாற்றியமைக்காக நான் மகிழ்ச்சியடைவதுடன் இ.நி.வ.அ.ச. இன் குழுவின் முன்னிறுத்தல் மற்றும் அர்ப்பணிப்பிற்கு நன்றி உரித்தாவதாக.

## புதுப்பிக்கத்தக்க வலுச் செயற்திறன்

எமது முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக, நிலைபெறுதகு வலு அதிகார சபையானது புதுப்பிக்கத்தக்க வலுவினூடாக மின்சக்தி உருவாக்கல் கொள்திறனை அதிகரிப்பதற்கான இலக்குகளை நிறுவியுள்ளது. அதிகார சபையானது, 2020 இல் இலக்குவைக்கப்பட்ட 200 மெகா வாட் கூரை மீதான சூரிய மின்வலு இலக்கினை 2019 இல் நாம் நிறைவேற்றியமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றது. 2020 ஆண்டிற்கான இலக்குகளை 2019 மே மாதத்தில் அடையக்கூடியமையானது ஓர் பாரிய சாதனையாகும். இதற்கு இத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான அதிகார சபையின் முன்னெடுப்பு காணப்பட்டது. இது எதிர்வரும் ஆண்டிற்கான எமது எதிர்கால புதுப்பிக்கத்தக்க வலு இலக்குகளுக்கு முன்னோடியாக எம்மை நிறுத்தியுள்ளது.

## வலுக் கொள்கை

2019 இல் அதிகார சபையானது துறைசார் முயற்சிகளுக்கு உறுதுணையளிக்கும் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளிலான அக்கறைகளை தீர்க்கும் பொறுப்பினை நாம் எம்மில் ஏற்றுக்கொண்டோம். பாரிஸ் உச்சிமாநாட்டின் பொதுவான குறிக்கோள்கள் நோக்கிய அனைத்து முயற்சிகளையும் இயக்கும் அவசியமான கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டிகளை நாம் அறிமுகப்படுத்தினோம். இந்த முயற்சியில், ஆகஸ்ட் 2019 இல் "இலங்கையின் தேசிய வலுக் கொள்கை மற்றும் மூலோபாயங்கள்" என்பதனை நாம் வர்த்தமானியிடக்கூடியதாய் இருந்தது. மேலும், 'வலு வினைத்திறன் கட்டியெழுப்புதல் நியமத்தினை" முடிவுறுத்தக்கூடியதாகவும், சௌகரியமான வீட்டுக் சூழலுக்கு இட்டுச்செல்லும் வலு வினைத்திறன் மூலோபாயங்களை வழங்கும், "இலங்கையில் நீடிப்புத்திறன்மிக்க வலு குடியிருப்புக்கள்" என்பதை பிரசுரிக்கக்கூடியதாகவும் இருந்தது. இவற்றுக்கும் மேலாக நாம் பின்வருவனவற்றையும் மேற்கொள்ளக்கூடியதாயிருந்தது. 'ஒளி உமிழ் இருமுனையங்களுக்கான ஆகக்குறைந்த செயற்திறன் நியமங்களை' செயல்படுத்தியமை, 'மின்சார கூரை மின்விசிறிகளுக்கான வலு வினைத்திறன் தரப்படுத்தலுக்கான' ஒழுங்குவிதி மற்றும் 'குளிர்சாதனப் பெட்டிகளுக்கான வலு அடையாளமிடுதல் நிகழ்ச்சித்திட்டம்', 'ஒளி உமிழ் இருமுனைய விளக்குகளுக்கான வலு அடையாளமிடுதல் நிகழ்ச்சித்திட்டம்' மற்றும் 'நீர் இறைப்பி, தொலைக்காட்சி மற்றும் சோறு சமைகலம் என்பவற்றிற்கான வலு அடையாளமிடுதல் நிகழ்ச்சித்திட்டம்" என்பனவாகும்.

## தொழில்நுட்ப ஊட்டுகை

அதிகார சபாயனது நி.வ.அ.ச. இன் முறைமைகள் மற்றும் செயல்முறைகளை ஓர் நிகழ்நிலை தளத்திற்கு மாற்றுவதற்கான ஓர் தீர்மானத்தினை மேற்கொண்டதுடன் நிதி நடவடிக்கைகளுக்காக ஓர் முழு அளவு எண்முறை உருமாற்றல் செயல்முறையினை வெற்றிகரமாக நிறைவேற்றியது. இவ்வாறு, இயங்கலை புதுப்பிக்கத்தக்க வலு விண்ணப்பச் செயல்முறை மற்றும் இயங்கலை சிறு நீர்மின்வலு திட்டங்களுக்கான இலத்திரனியல்-பாய்ச்சல் செயல்முறை என்பன முன்னெடுக்கப்பட்டன. இது இ.நி.வ.அ.ச. இன் முறைமைகள், செயல்முறைகள், அங்கீகாரங்கள் மற்றும் நடவடிக்கைகள் அனைத்தும் விரைவானதாகவும், வினைத்திறன் மிக்கதாகவும் மற்றும் வெளிப்படைத்தன்மை உடையதாகவும் காணப்படுவதனை குறிப்பிடுகின்றது.

## ஆய்வில் முதலீடு செய்தல்

மீளாய்வாண்டில், நிலைபெறுதகு வலு அதிகார சபையானது பொதுமக்களுக்கு புதுப்பிக்கத்தக்க வலு தரவுகளுக்கான புலப்பாடு மற்றும் அணுக்கம் உள்ளடங்களான பல ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முதலீட்டினை மேற்கொண்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் (UNDP) உறுதுணையுடன், அதிகார சபையானது பொது மக்களை அறிவூட்டுவதற்காக, நாடுபூராவுமான வலு மற்றும் வலு வினைத்திறன்மிக்க திட்ட தரவுகளை கையகப்படுத்துவதன் மூலம் வலு தரவு முகாமைத்துவ முறைமைக்கான ஓர் இணையத் தளத்தினை ஆரம்பித்தது. இந்த இணையத்தளமானது ஓர் நிகழ்நேர அடிப்படையில் பசுமையில்லா வாயு உமிழ்வுகளது குறைப்பு, அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் வலு உருவாக்கம் என்பவற்றை இற்றைப்படுத்துவதுடன் துறைசார் பகுப்பாய்வாளர்கள் மற்றும் உலகளாவிய வலுத் துறை ஆர்வலர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நம்பகமான மற்றும் நடைமுறை தரவுகளை வழங்குகின்றது.

தேசிய மின்தொகுப்பிற்கு ஓர் கணிசமானளவு கொள்திறனை சேர்க்கக்கூடிய சாத்தியமுள்ளதென நாம் நம்பும் அலை வலு வளங்கள் மதிப்பீட்டிலான ஆய்வு நிறைவுசெய்யப்பட்டது. அதன் சாத்தியமானது இன்னமும் மதிப்பிடப்படாவிட்டாலும், இது அண்ணளவாக வருடத்திற்கு 50TWh வலுவினை உருவாக்கும் என நாம் எதிர்பார்கின்றோம்.

# பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

உலக வங்கியின் ESMAP திட்டத்துடன் ஒன்றிணைந்து கரைகடந்த காற்று வலுவின் சாத்தியத்தினை ஆராய்வதற்கான ஒரு திட்டத்தினையும் நாம் ஆரம்பித்துள்ளோம். வடக்கு குடாநாடானது தேசிய மின்தொகுப்பிற்கு 50 கிகா வாட்டுக்கும் அதிகமான கொள்திறனை சேர்க்கும் என நம்பப்படுகின்றது.

கூட்டாக, இந்த திட்டங்கள் பாரிஸ் பிரகடனத்தின் வலுத் தேவைப்பாடுகள் மற்றும் தேசிய வலுக் கொள்கை என்பவற்றை சந்திப்பதற்கு போதுமானதாகும்.

**ஓர் புதுப்பிக்கத்தக்க வலு எதிர்காலத்தினை அடைதல்**

நிதியளித்தல் முகவர்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களது துணையுடன் பாரிஸ் உச்சிமாநாட்டில் இலங்கை ஒப்புதலளித்த இலக்குகளை நிலைபெறுதகு வலு அதிகார சபையானது அடையும் என நாம் நிச்சயமாக நம்புகின்றோம்.

இலங்கை புதைபடிம எரிபொருளில் சார்ந்திருப்பதனை குறைத்து அனைத்து துறைகளிலும் புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டினை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் செயற்திட்டம் நிறுவப்பட்டுள்ளது.

பாரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க வலு பூங்காக்களுக்கு சாத்தியமான இடங்களை நாம் இனங்கண்டு இருப்பளவினையும் மேற்கொண்டுள்ளோம். நீடிப்புத்திறன்மிக்க உயிர்க்கூள வலு உருவாக்கம் மற்றும் நவீன உயிரி வலு தொழில்நுட்பங்களை ஊக்குவிக்குப்பதில் நாம் ஒரு வெற்றிகரமான திட்டத்தினை நிறைவுசெய்தோம்.

இந்த திட்டங்களது உள்ளுணர்வுடன் நீடிப்புத்திறன்மிக்க வலு இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் பயணமானது ஓர் அடையக்கூடிய யதார்த்தமாகும் என நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.



**கலாநிதி. அசங்க ரொட்ரிகோ**
பணிப்பாளர் நாயகம்

# முகாமைத்துவச் சபையின் முகக்குறிப்பு

**திரு. டி.எம்.ஆர்.பங்ஸ ஜயா**
*தலைவர்*
இ.நி.வ.அ.ச.
31.01.2019 - 25.11.2019

**செல்வி. கே.எம்.மாலினி குமாரிஹாமி**
*மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் கொள்முதல்)*
மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சு
ஜனவரி - செப்டம்பர்

**செல்வி. ஐ.ஜே.அபேரத்ன**
*பணிப்பாளர் – வணிகம் (ஆய்வு மற்றும் அபிவிருத்தி)*
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு
ஜனவரி - பெப்ரவரி

**திரு. தமிந்த குமார**
*சிரேஷ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்)*
மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
ஜனவரி - பெப்ரவரி

**திரு. கே.பி.குருகே**
*பிரதம கணக்காளர்*
பெருந்தோட்டத் துறை அமைச்சு
ஜனவரி - பெப்ரவரி

**திரு. ஜி.டி.பி.கே.சேனாரத்ன**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
30.01.2019 - ஆகஸ்ட்

**திரு. டி.வி.பந்துலசேன**
*மேலதிக செயலாளர்*
விவசாய அமைச்சு
ஆகஸ்ட்

**திரு. சிந்தக்க உதயசாந்த**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
30.10.2018 - டிசம்பர்

**திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே.ஜயசிங்க**
*சிரேஷ்ட உதவி செயலாளர்*
போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு
ஜனவரி - டிசம்பர்

**திரு. எஸ். தர்ஷன்**
*உதவிச் செயலாளர்*
அரச கணக்குகள் திணைக்களம், நிதி அமைச்சு
ஜனவரி - டிசம்பர்

**திரு. தமித்த குமாரசிங்க**
*பணிப்பாளர் நாயகம்*
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
ஜனவரி - டிசம்பர்

**திரு. குணரத்ன வன்னிநாயக்க**
*சட்டத்தரணி*
30.01.2019 - 24.09.2019

**திரு. எஸ். உபுல் பிரியந்த பர்னாந்து**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
30.10.2018 - 17.12.2019

**திரு. கிஷான் நாணயக்கார**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
30.10.2018 - 19.12.2019

**செல்வி. அம்பபாலி சிக்குராஜபதி**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
30.01.2019 - 17.12.2019

**திரு. ஈ.எம்.பியசேன**
*நியமிக்கப்பட்ட அங்கத்தவர்*
28.02.2019

**திரு. ஜே.ஏ.ரஞ்சித்**
*செயலாளர்*
பெருந்தோட்டத் துறை அமைச்சு
28.02.2019 - 26.12.2019

**செல்வி. குலானி எச்.டபிள்யு.கருணாரத்ன**
*பணிப்பாளர் (புலனாய்வு)*
மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு
28.02.2019 - 18.12.2019

**திரு. ஜி.எஸ்.கே.கன்னங்கர**
*சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்)*
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
28.02.2019 - 16.12.2019

**திரு. எஸ்.எல்.நசீர்**
*மேலதிக செயலாளர் - கொள்கை மற்றும் வணிகம்*
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு
12.03.2019 - 16.12.2019

**திரு. சிந்தக்க எஸ். லொக்குஹெட்டி**
*செயலாளர்*
விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு
12.03.2019 - டிசம்பர்

**செல்வி. டபிள்யு.எம். தீப்தி பர்னாந்து**
*மேலதிக செயலாளர்*
காணிகள் மற்றும் பாராளுமன்ற சீர்திருத்தல்கள் அமைச்சு
14.05.2019 - 17.12.2019

**செல்வி. எம்.கே.ராஜபக்ஷ**
*உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)*
மின்சக்தி, வலு மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சு
02.10.2019 - 17.12.2019

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம்

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தொகுப்பு 2019**

**திரு. எஸ். தர்ஷன்**
*தலைவர்*

**செல்வி. மாலினி குமாரிஹாமி**
*அங்கத்தவர்*

**திரு. குணரத்ன வன்னிநாயக்க**
*அங்கத்தவர்*

**திரு. ஏ.எம்.ஆர்.ஜே.ஜயசிங்க**
*அங்கத்தவர்*

**செல்வி. டபிள்யு.எம்.தீப்தி பர்னாந்து**
*அங்கத்தவர்*

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அவதானிகள்**

**செல்வி. எச்.ஏ.டி.சாந்தனி**
தேசிய கணக்காய்வு அலுவலகம்

**திருமதி. ஈ.ஏ.என்.பி. எதிரிசிங்க**
தேசிய கணக்காய்வு அலுவலகம்

**திருமதி. பி.ஏ.டி. அபேவர்தன**
சக்தி, வலு மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சு

# நீர்மின்வலு

# 419.5 MW

## திட்டங்களின் எண்ணிக்கை

# 208

புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கலில் நீர்மின்வலு தொடர்ந்தும் பிரதான பங்களிப்பாளராக காணப்படுவதுடன், நடைமுறையிலுள்ள நீர்மின்வலுப் பொறித்தொகுதிகள் நாட்டின் புதிய புதுப்பிக்கத்தக்க வலுத் தேக்கத்தின் பெருமளவினை வழங்குகின்றன.



# ஆண்டிற்கான
# சிறப்பம்சங்கள்



# செயற்திறன் சிறப்பம்சங்கள்

| விளக்கம் | அலகு | 2019 | 2018 |
|---|---|---|---|
| **செயற்திறன் சிறப்பம்சங்கள்** | | | |
| புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி | GWh | 1,579 | 1,742 |
| நீர்மின்வலு திட்டங்களிலிருந்தான திரண்ட கொள்ளளவு | MW | 419 | 380 |
| சூரியவலு திட்டங்களிலிருந்தான திரண்ட கொள்ளளவு (தரையில் ஏற்றப்பட்டவை) | MW | 57 | 51 |
| காற்றுத் திட்டங்களிலிருந்தான திரண்ட கொள்ளளவு | MW | 128 | 128 |
| உயிர்க்கூள திட்டங்களிலிருந்தான திரண்ட கொள்ளளவு | MW | 43 | 34 |
| தேசிய மின்தொகுப்புடன் இணைக்கப்பட்ட கூரைமீதான சூரியவலுவின் திரண்ட எண்ணிக்கை | எண்ணிக்கை | 24,696 | 19,164 |
| கூரைமீதான சூரியவலுத் திட்டங்களிலிருந்தான திரண்ட கொள்ளளவு | MW | 261 | 176 |
| கூரைமீதான சூரியவலுத் திட்டங்களிலிருந்தான உற்பத்தி | GWh | 362 | 215 |
| வினைத்திறன்மிக்க உபகரணங்களிலிருந்தான வலுச் சேமிப்பு | GWh | 738 | 721 |
| இ.தே.வ.வி.வி. தலையீட்டினூடாக சேமிக்கப்பட்ட மின்சார அலகுகளின் எண்ணிக்கை | GWh | n/a | 27 |
| இ.தே.வ.வி.வி. தலையீட்டினூடாக சேமிக்கப்பட்ட உலை எரியெண்ணெயின் அலகுகள் | மில்லியன் லீட்டர்கள் | n/a | 17 |
| தவிர்க்கப்பட்ட கரியமில வாயு | மெட்ரிக் தொன்கள் | 2,090,338 | 2,193,563 |
| **மனித வளம்** | | | |
| இ.நி.வ.அ.ச. இன் மொத்த பணியாட்டொகுதி | எண்ணிக்கை | 104 | 100 |
| 10 வருடங்களுக்கும் அதிகமான பணியாட்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 54 | 45 |
| 5 வருடங்களுக்கும் அதிகமான பணியாட்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 77 | 71 |
| பணியாட்களுக்கான மொத்த கொடுப்பனவு | ரூபா மில்லியன் | 92 | 94 |
| **சமூக மற்றும் உறவுமுறை மூலதனம்** | | | |
| நடாத்தப்பட்ட வலுக் கணக்காய்வுகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 25 | 23 |
| வலு முகாமையாளர்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 7 | 3 |
| உபகரணம் வாடகைக்கு அமர்த்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | நாட்கள் | 1,710 | 1,220 |
| பிரசுரிக்கப்பட்ட வலு அடையாளமிடல் நியமங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2 | 2 |
| அம்பாந்தோட்டை சூரியவலுப் பூங்காவிற்கான வருகையாளர்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 1,100 | 1,364 |
| இ.நி.வ.அ.ச. உடன் பதிவுசெய்த சூரியவலு சேவைக் கம்பனிகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 327 | 251 |
| பிரசுரிக்கப்பட்ட சூரியவலு நியமங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 1 | 2 |
| சமய/அரசாங்க வளாகங்களுக்கான கூரைமீதான நிர்மாணங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 0 | 95 |
| வசதியளிக்கப்பட்ட ஆய்வுகளின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 6 | 4 |
| பிரசுரங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 8 | 7 |

**1,011 GWh**

சிறிய நீர்மின்வலு திட்டங்களிலிருந்தான திரண்ட உற்பத்தி



**348 GWh**

காற்று வலுத் திட்டங்களிலிருந்தான திரண்ட உற்பத்தி



**464 GWh**

சூரியவலு திட்டங்களிலிருந்தான திரண்ட உற்பத்தி



**118 GWh**

உயிர்க்கூள திட்டங்களிலிருந்தான திரண்ட உற்பத்தி



**738 GWh**

வினைத்திறன்மிக்க உபகரணங்களிலிருந்தான வலுச் சேமிப்பு



# நிலைபெறுதகு வலு நடவடிக்கைகள் மற்றும் சாதனைகள்

### தேசிய வலுக் கொள்கையினை உருவாக்குதல்

#### தேசிய வலுக் கொள்கையினை பிரசுரிப்பதில் துறைக்கான ஓர் பாரிய சாதனைக்கு துணைபுரிதல்

இ.நி.வ.அ.ச. இன் நான்கு பிரதான குறிக்கோள்களில் ஒன்றினை நிறைவேற்றுவதற்காக, 2019 ஆகஸ்ட் 09 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2135/61 ஊடாக இலங்கைக்கான தேசிய வலுக் கொள்கை மற்றும் மூலோபாயங்களது பிரகடனத்தினை நிறைவேற்றவதற்காக மின்சக்தி மற்றும் வலு அமைச்சிற்கு முக்கியமான உறுதுணையினை வழங்கக்கூடியதாயிருந்ததுடன், இது வலுத் துறைக்கான ஓர் வெற்றிகரமான மைற்கல்லை அடைந்தது. ஓர் செயற்குழுவினால் தயாரிக்கப்பட்டு, அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஓர் நிபுணத்துவக் குழுவினால் மேலும் மீளாய்வு செய்யப்பட்டு, அடுத்த பத்தாண்டுக் காலத்தின் முதல் அரைவாசியில் இக்கொள்கையானது வலுத் துறையினை இயக்கும். வலுக் கொள்கையின் பிரதான குறிக்கோளானது, இலங்கையில் சமூகரீதியாக சமத்துவமான அபிவிருத்திக்கு துணைபுரிவதற்காக தூய்மையான, பாதுகாப்பான, சிக்கனமான மற்றும் நம்பகமான வழங்கல்களூடாக வலுப் பாதுகாப்பினை மற்றும், வசதியான, கட்டுப்படியாகக்கூடிய வலுச் சேவைகளை வழங்குவதனையும் உறுதிப்படுத்துவதற்காகும். இக்கொள்கையானது இலங்கையின் எதிர்கால இலக்குகள், உலகளாவிய போக்குகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் நீடிப்புத்திறன்மிக்க அபிவிருத்தி இலக்குகளின் ஏழாவது இலக்கு என்பவற்றை கருத்திலெடுத்து வடிவமைப்பட்டுள்ளது.

இக்கொள்கையானது 2050 ஆம் ஆண்டளவில் அனைத்து வலுப் பெறுமதி பிணைப்புகளிலும் கரிம நடுநிலை மற்றும் முற்றான நிலைமாறலை அடைந்து இலங்கையின் தொலைநோக்கினை அடைவதற்கு வழிசமைக்கும். தேசிய வலுக் கொள்கையானது பத்து தூண்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அவை சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தும் பரவலான பிரிவுகளில் வேரூன்றியுள்ளது. இவை முறையே சமத்துவம், பாதுகாப்பு மற்றும் நீடிப்புத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதனூடாக விசைகளை எதிரீடு செய்வதற்காகும்.

1. வலுப் பாதுகாப்பினை உறுதிசெய்தல்
2. வலுச் சேவைகளுக்கான அணுக்கத்தினை வழங்குதல்
3. தேசிய பொருளாதாரத்திற்கு உகந்த கிரயத்தில் வலுச் சேவைகளை வழங்குதல்
4. வலுச் செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துதல்
5. தற்சார்பினை மேம்படுத்துதல்
6. சுற்றுச்சூழலில் அக்கறை கொள்ளல்
7. புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கினை மேம்படுத்துதல்
8. வலுத் துறையில் நல்ல ஆளுகையினை பலப்படுத்துதல்
9. எதிர்கால வலு உட்கட்டமைப்பிற்கான காணியினை அடைதல்
10. புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவிற்கான வாய்ப்புக்களை வழங்குதல்



# காற்று

# 128.5 MW

## திட்டங்களின் எண்ணிக்கை

# 15

நாட்டின் மத்திய மற்றும் கரையோரப் பகுதிகளில் இனங்காணப்பட்ட புதிய சாத்தியப்படக்கூடிய காற்று வளங்களையுடைய இடங்களுடன் காற்று வலுவானது உயர்வடைகின்றது. தேசிய வலு வழங்கலுக்கு இது ஓர் முக்கிய பங்களிப்பாளராகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# கூட்டாண்மை ஆளுகை



# கூட்டாண்மை ஆளுகை

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் முகாமைத்துவச் சபையானது சமத்துவம், நியாயம், நடுநிலைமை, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை ஆகிய கொள்கைகளில் செயற்படுகின்றது. இவை யாவும் அதன் அனைத்து பங்காளிகளுடனும் ஓர் திடமான உறவினை கட்டியெழுப்புதல் மற்றும் நிலைபெறுதகு வலு அபிவிருத்திக்கு உகந்த ஓர் சூழலை வளர்த்தல் ஆகிய முயற்சிகளுக்கு துணைபுரியும் தூண்களாகும். அதிகாரசபையின் நடவடிக்கைகள் நெறிமுறை நியமங்களுக்கு ஏற்பவும் அரசாங்கம் மற்றும் அனைத்து இலங்கையர்களதும் சிறந்த நலனுக்கு ஏற்பவும் நடாத்தப்படுகின்றன. இந்தக் கடப்பாட்டிற்கு, அரசாங்கத்தின் நிலைபெறுதகு வலுக் கொள்கைக்கு அமைவாக உத்தியோகத்தர்கள் மற்றும் தனிநபர்கள், கட்டமைப்புகள், முறைமைகள் மற்றும் செயல்முறைகள் மற்றும் தகவல்கள் என்பவற்றால் உறுதுணையளிக்கப்படுகின்றன.

### முகாமைத்துவச் சபை

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தினால் அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு முகாமைத்துவச் சபையானது பதில் சொல்லக்கூடியதாகவும் பொறுப்புடையதாகவும் காணப்படுகின்றனது. இவ்விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் தலைவரினால் இது முன்னெடுக்கப்படுகின்றது.

### பொறுப்புடைமை

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை சந்திப்பதற்கும் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவச் சபையானது பொறுப்பாளியாயுள்ளது. இதற்கும் மேலாக, இச்சபை உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் முறையான செயற்பாட்டினை உறுதிசெய்தல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படும் நிதியியல் தகவல்களின் நேர்மைக்கும் பொறுப்பாளியாய் இருத்தல் வேண்டும். அதிகாரசபையின் செயற்பாட்டு முகாமைத்துவமானது அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் மேற்கொள்ளப்படுவதுடன், இவரே நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். இவர் சபையின் பொதுவான வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராவார். சபைக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது துணைபுரிகின்றது. இந்த உபகுழுவானது நிதியியல் தோற்றத்தினை மேற்பார்வை செய்கின்றது. அதேபோன்று, சபையின் அறிவுத் திறனுக்கு அப்பால் உயர்ந்த தொழில்நுட்ப சிக்கலுடைய விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும்போது, அவசியமானவிடத்து சபையானது வெளிவாரி ஆலோசனைக் குழுக்களின் உதவியினைப் பெற்றுக்கொள்கின்றது.

அதிகாரசபையின் அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டிகளுடன் கண்டிப்பாக இணங்கியொழுகி மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள், எதிர்பார்க்கும் கொள்முதலின் பெறுமதியினைப் பொறுத்து சுயாதீன தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுக்கள் மற்றும் இரண்டு கொள்முதல் குழுக்களின் வழிகாட்டுதலுடன் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களினால் பொறுப்பேற்கப்படுகின்றன.

### கூட்டமைவு

சபையானது இருபத்து ஒரு அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும். இதில் பன்னிரண்டு பேர் பதவிவழி அங்கத்தவர்கள் மற்றும் ஏனைய ஒன்பது அங்கத்தவர்கள், தலைவர் உள்ளடங்களாக, நியமனப் பெற்றவர்களாவார்கள்.

### சபையின் கூட்டங்கள்

சபையின் கூட்டங்கள் மாதாந்த அடிப்படையில் அட்டவணையிடப்படுகின்றன. இந்த கூட்டங்களில் சபையானது அதிகாரசபையின் மூலோபாய வழிகாட்டல்களை குறிப்பிடுவதுடன், அனைத்து நடவடிக்கைகளதும் செயற்திறன் மற்றும் முன்னேற்றம், மீள்நிகழும் மற்றும் மூலதனச் செலவினத் திட்டங்களை மீளாய்வு செய்கின்றது. இந்தக் கூட்டங்கள் அதிகாரசபையின் குறிக்கோள்களை அடைவது நோக்கி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் செயற்திட்ட பரிந்துரைகளை சபையின் கவனத்திற்காக சமர்ப்பிக்கும் வாய்ப்பினை வழங்கும் மன்றமாகவும் காணப்படுகின்றது. ஒவ்வொரு கூட்டத்திற்கு முன்பாகவும் பொருத்தமான ஆவணங்கள் முற்கூட்டியே சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற முகாமைத்துவச் சபையின் கூட்டங்களின் விபரங்கள் பின்வருமாறு.

| கூட்ட இலக்கம் | கூட்டத் திகதி | பங்கேற்பு |
|---|---|---|
| 01/2019 | 05 பிப்ரவரி 2019 | 15 |
| 02/2019 | 26 பிப்ரவரி 2019 | 13 |
| 03/2019 | 26 மார்ச் 2019 | 15 |
| 04/2019 | 11 ஏப்ரல் 2019 | 14 |
| 05/2019 | 22 மே 2019 | 16 |
| 06/2019 | 12 ஜூன் 2019 | 17 |
| 07/2019 | 30 ஜூலை 2019 | 14 |
| 08/2019 | 27 ஆகஸ்ட் 2019 | 12 |
| 09/2019 | 25 செப்டம்பர் 2019 | 7 |
| 10/2019 | 10 அக்டோபர் 2019 | 11 |

### சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகியமை

முகாமைத்துவச் சபையானது, அதிகாரசபை சட்டம் மற்றும் ஏனைய பொருத்தமான விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் காலாகாலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படும் வழிகாட்டிகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கும் அமைவாக தயாரிக்கப்படுவதனை சபை உறுதிசெய்கின்றது.

# இடர்நேர்கை முகாமைத்துவம்

சிறந்த முகாமைத்துவம் மற்றும் ஆளுகையின் ஓர் ஒருங்கிணைந்த உட்கூறாக இடர்நேர்கை முகாமைத்துவம் காணப்படுவதனை இ.நி.வ.அ.ச. அங்கீகரிக்கின்றது. இது நிலைபெறுதகு வலு முகாமைத்துவம் தொடர்பான பொதுவான இடர்நேர்கைகள் மற்றும் துறைசார்ந்த விசேட இடர்நேர்கைகளையும் இனங்காண்கின்றது. விசேட இடர்நேர்கைகள் பிரதானமாக வலு வினைத்திறன் மேம்படுத்தல், புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி மற்றும் கொள்கை சூழல் தொடர்பானவை என்பதுடன் இவை இ.நி.வ.அ.ச. செயற்படுத்தும் உட்பொருள் பிரிவுகளாகும். இ.நி.வ.அ.ச. இன் முகாமைத்துவ சபை சிரேஷ்ட முகாமைத்துவத்துடன் கூட்டாக, திடமான நிதியியல் மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாடுகள் காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக இடர்நேர்கை முகாமைத்துவத்தில் விசேட கவனத்தினை செலுத்துகின்றது. காலாகாலம், இ.நி.வ.அ.ச. இன் பொறுப்பாணையினை விநியோகிப்பதில் காணப்படும் முறைமைகளின் வினைத்திறனை உள்ளக கணக்காய்வாளர்கள் மற்றும் முகாமைத்துவக் குழு மீளாய்வு செய்கின்றது.

### இடர்நேர்கை கலாச்சாரம்

முகாமைத்துவச் சபையானது இடர்நேர்கையில் அதன் நிலையினை திடமாக நிறுவி இடர்நேர்கை ஒப்படைப்பினை சீராக பராமரிக்கின்றது. முகாமைத்துவமானது தீர்மானம் மேற்கொள்ளும்போது அனைத்து பங்காளிகளதும் அக்கறைகள் மற்றும் நிலைமையினை கருத்திலெடுப்பதுடன் நெறிமுறையான கொள்கைகளுக்கான அதன் கடப்பாட்டினை இது பிரதிபலிக்கின்றது. தலைமைத்துவத்திற்கு ஒட்டியொழுகும் வண்ணம், பணியாட்கள் அத்தகைய நெறிமுறையான கொள்கைகளின் முக்கியத்துவத்தினை ஏற்றுக்கொண்டு அதனை தொடர்ந்தும் பின்பற்றுகின்றார்கள்.

### இடர்நேர்கையினை இனங்காணுதல்

இ.நி.வ.அ.ச. வெளிவாரி சுற்றுச்சூழலை ஆர்வமாக கண்காணித்து பொருத்தமானவிடத்து இடர்நேர்கைகளை இனங்காண்கின்றது. பயனுறுதிமிக்க கட்டுபாட்டு நோக்கங்களுக்காக, இந்த இடர்நேர்கைகளை இது உலகளாவிய சக்தித் துறைக்கு பொதுவானவையாக மற்றும் /அல்லது விசேடமாக இலங்கைக்கு மாத்திரம் உரியதாக வகைப்படுத்துகின்றது. இதற்கும் மேலாக, இ.நி.வ.அ.ச. நாட்டின் கொள்கைகள் மற்றும் நீடிப்புத்திறனுடைய வலுத் தேவைப்பாடுகளுடன் இணக்கப்பாடு காணும் செயற்படுத்தக்கூடிய திட்டங்களை இனங்காண்பதற்காக நாட்டில் தேசிய புதுப்பிக்கத்தக்க வலுக் கொள்கை மேற்கொள்ளல் செயல்முறையினை கண்காணிக்கின்றது.

### இடர்நேர்கை முகாமைத்துவம்

இ.நி.வ.அ.ச. ஆனது புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை ஊக்குவித்தல் மற்றும் வலு விரயத்தினை குறைத்தல் என்பன அதன் பிரதான பொறுப்புக்கள் என எண்ணுகின்றது. அதிகாரசபையானது, புதுப்பிக்கத்தக்க வலுவிற்கு ஓர் மலிவான மாற்றீடான குறைந்த விலையிலான புதைபடிம எரிபொருளினை, இந்த குறிக்கோள்கள் நோக்கிய பிரதான இடர்நேர்கையாக இனங்கண்டுள்ளது. இது இறுதிப் பயனாளிகளிடம் வலுக் கிரயம் தொடர்பாக அலட்சியத்தினை ஏற்படுத்துவதுடன் இது இறுதி பயனாளி தளத்தில் வலு விரயத்திற்கு வழிவகுக்கும்.

இதன் பிரகாரம், இ.நி.வ.அ.ச. நீடிப்புத்திறனுடைய வலுச் சந்தையினை ஆகக்குறைந்த சாத்தியமான கிரய நிலைமைக்கு உருமாற்றம் செய்யும் இடர்நேர்கை முகாமைத்துவ மூலோபாயத்தினை பொறுப்பேற்றுள்ளது. இது புதைபடிம எரிபொருளின் விலை குறைவாகக் காணப்பட்டாலும் புதுப்பிக்கத்தக்க வலுச் சேவைகளுக்கான கேள்வி குன்றாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும். மின்சாரப் பயன்பாடுகளினால் பொறுப்பேற்கப்படும் போட்டித்தன்மையுடைய செயல்முறையினூடான புதுப்பிக்கத்தக்க வலு கொள்முதலுக்கு இ.நி.வ.அ.ச. இனால் துணையளிக்கப்படுவதுடன், இதன் மூலம் மின்சாரக் கொள்வனவிற்கு ஆகக் குறைந்த விலையினை பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தது. சூரிய சக்தி விலையினை போட்டித்தன்மையுடையதாய் ஆக்குவதற்காக மற்றும் கூரை மேலான சூரிய சக்தித் துறையில் போட்டித்தன்மையினை ஊக்குவிப்பதற்காக ஆரம்ப நிலை கம்பனிகளை சேவை வழங்குநர்களாக வருவதற்கு அனுமதிப்பதன் மூலம் சூரிய சக்தித் துறையானது பேணி வளர்க்கப்படுகின்றது. அதேபோன்று, வலுச் சேவைகள் நிறுவனங்கள் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் பொருளாதாரத்திற்கு வினைத்திறன்மிக்க வலுச் சேவைகளை, குறைந்த மின்சாரம் மற்றும் குறைந்த விலையிலான புதைபடிம எரிபொருளின் மத்தியிலும் தொடர்ச்சியாக விநியோகித்து சேவையாற்றுவதனை இயலுமையாக்குவதற்கு துணையளிக்கப்படுகின்றது.

### வளங்களை இழக்கக்கூடிய இடர்நேர்கை

பல்வேறு காரணிகளினால் அச்சுறுத்தப்பட்ட நாட்டின் புதுப்பிக்கத்தக்க வலு வளங்கள் ஒன்றில் வலு வளங்களின் கிடைப்புத்திறனை குறைத்துள்ளது அல்லது வளங்களின் கிடைப்புத்திறனை நகர்த்தியுள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் காடழித்தல், முறையற்ற நிலத்தின் பயன்பாட்டு செயல்முறைகள் மற்றும் ஏனைய மனித நடவடிக்கைகள் காரணமாயிருந்துள்ளன. விரிவடையும் குடியேற்றங்களின் காரணமாக பரந்தளவிலான ஆக்கவளமுடைய காற்று வலு வள இடங்கள் இழக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் காடழிப்பு, வர்த்தக தோட்டப்பயிர்ச் செய்கையின் விரிவாக்கம் என்பவற்றின் காரணமாக, சிறப்பான சீர்ப்பாய்வு பண்புகளுடைய நல்ல நீர்மின்வலு உற்பத்தி வளங்கள் ஒழுங்கற்று செயற்பட ஆரம்பித்துள்ளதுடன், காலநிலை மாற்றத்தின் நேரடி விளைவாக மழைப்பொழிவின் போக்கினை மாற்றியமைத்துள்ளது.

இயற்கைக் காரணங்களுக்கும் மேலாக, புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களின் அபிவிருத்திக்கெதிராக சிவில் சமூக ஒழுங்கமைப்புகளினால் மேற்கொள்ளப்படும் அதிகரித்த சட்ட நடவடிக்கையின் மூலம் புதுப்பிக்கத்தக்க வலு வளங்கள் மேலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. திட்ட அபிவிருத்தியாளர்களுக்கு எதிராக 2019 இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளதுடன் இதில் இ.நி.வ.அ.ச. ஓர் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விரண்டு காரணிகளும் புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை அரிதாக்கியும் அடையமுடியாததாகவும் ஆக்கியுள்ளன.

### வலுச் சேவைகளின் குறைந்த விலையிலான இடர்நேர்கை

2014 இல் மின்சார விலைகள் 25% விலை குறைப்பிற்கு உட்பட்டதுடன் இது வலுச் சேவைகள் துறையினை பாதித்தது. பகற்பொழுதில் கைத்தொழில் துறையானது மிகவும் குறைந்த கட்டணத்தினை அனுபவித்து உற்பத்திக் கிரயத்தினை கீழ் கொண்டுவந்தது. கைத்தொழில்களுக்கான இந்த அனுகூலத்தின் நீக்கலுடன் வலு விரயத்தினை கட்டுப்படுத்துவதிலான ஆர்வம் குறைவடைந்து வினைத்திறன் மிக்க வலுச் சேவைகள் துறையில் கணிசமான சந்தைப் பங்களிப்பு சுருக்கத்தினை ஏற்படுத்தியது. அதேபோன்று, கைத்தொழில் அனல் மின் பாவனையில் பயன்படுத்தப்பட்ட புதைபடிம எரிபொருளும் மிகவும் குறைவாகக் காணப்பட்டு இந்த விளைவுகளை அதிகரித்தது. எனினும், ஓர் வரையறுத்த எண்ணிக்கையிலான நிறுவன பயனாளிகள், பாரிய அளவிலான வினைத்திறனுடைய வலு மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுவதன் மூலம் அவர்களது நீடிப்புத்திறன் இலக்குகளை தொடர்ந்தார்கள். இதன் மூலம் கரிம அடிச்சுவட்டினை குறைப்பதிலும் செயற்பாட்டு செலவினங்களை குறைப்பதிலும் கணிசமானளவு நலன்களை அடைந்தார்கள்.

### இடர்நேர்கையின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு

இ.நி.வ.அ.ச. இன் நடைமுறையிலுள்ள இடர்நேர்கை முகாமைத்துவச் செயல்முறைகள் மற்றும் அவற்றின் அமுலாக்கம் என்பன, கட்டுப்பாடுகளிலான பலவீனங்களை இனங்காணும் தேவைக்காக, தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் அவசியமான உள்வாரி மற்றும் வெளிவாரி மாற்றங்கள் பொறுப்பேற்கப்படுகின்றன. நடவடிக்கைகளின் கண்காணிப்பிற்கும் மற்றும் அவற்றின் மதிப்பாய்விற்கும் இறுதியில் சிரேஷ்ட முகாமைத்துவம், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு என்பன பொறுப்பாயுள்ள வேளை, உள்ளகக் கணக்காய்வாளர் வெவ்வேறு சேவை விநியோக அங்கங்களிலான முன்னிறுத்தலுடன் முறைமை அடிப்படையிலான கணக்காய்வினை அடிக்கடி மேற்கொள்கின்றார். வருடாந்தம், இடர்நேர்கை முகாமைத்துவச் செயல்முறையின் செயற்திறன் மற்றும் பயனுறுதித்தன்மை என்பன மீளாய்வு செய்யப்பட்டு அவசியமானவாறு மாற்றம் செய்யப்படுகின்றது.

## சூரியசக்தி

# 57.4 MW

## திட்டங்களின் எண்ணிக்கை

# 14

வீழ்ச்சியடையும் விலைகளுடன் சூரியசக்தியானது ஏனைய அனைத்து வலு உற்பத்தி தொழில்நுட்பங்களையும் செலவு குறைப்பிற்காக கிடைக்கக்கூடிய அனைத்து வழிவகைகளையும் அடைவதற்கு தூண்டும்.



# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு



# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

நிலைபெறுதகு வலு அதிகார சபையானது அதன் பொறுப்பாணையினை இரண்டு முக்கிய மூலோபாயங்களூடாக அமுல்படுத்துகின்றது அவையாவன, கேள்விப் பக்க முகாமைத்துவம் (கே.ப.மு.) மற்றும் வழங்கல் பக்க முகாமைத்துவம் (வ.ப.மு.) ஆகும். இவ்விரண்டு மூலோபாயப் பிரிவுகளும் துறைக்கான முறைமைப்படுத்தல் மேற்பார்வையினையும் வளர்ச்சி உறுதுணை, விழிப்புணர்வு மற்றும் வலு ஆய்வு மற்றும் கண்காணித்தல் என்பவற்றினை வழங்குகின்றன. அதிகார சபையானது அனைத்து பங்காளிகளது நடவடிக்கைகள் மற்றும் தேசத்தின் மற்றும் நிலைபெறுதகு வலுத் துறையின் எதிர்கால இலக்குகள் என்பன சந்திக்கப்படுதல் மற்றும் அவை உலகளாவிய மரபுகளுக்கு ஒத்தாற்போல் காணப்படுவதனை உறுதிப்படுத்துகின்றது.

வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள், அதிகரித்த வளங்களின் ஒதுக்கீடு மற்றும் பாரிஸ் மாநாட்டு இலக்குகள் மற்றும் நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தேசிய புதுப்பிக்கத்தக்க வலு நிகழ்ச்சி நிரல் என்பவற்றை சந்திப்பதற்கான தேசிய புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி திட்டங்களை உயர்த்துதல் என்பவற்றில் முன்னிறுத்தம் செய்யப்படுகின்றது. இவற்றின் மூலம் புதிய புதுப்பிக்கத்தக்க வலு (பு.பு.வ.) மூலங்களிலிருந்து 11% க்கும் அதிகமான மின்சாரப் பங்கினை பேணக்கூடியதாயிருக்கும்.

### புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கம்

| புதுப்பிக்கத்தக்க வலு மூலம் | திட்டங்களின் எண்ணிக்கை | நிறுவப்பட்ட கொள்திறன்கள் | மின்சார உருவாக்கம் (கி.வ.ம./வருடாந்தம்) | கரியமில வாயு வெளிப்பாடு (தொன்/வருடாந்தம்) |
|---|---|---|---|---|
| உயிர்க்கூளம் | 12 | 43 | 118 | 92 |
| நீர்மின்வலு | 208 | 419 | 1,011 | 789 |
| சூரியசக்தி | 14 | 57 | 102 | 80 |
| கூரைமீதான சூரியசக்தி | 24,696 | 261 | 362 | 282 |
| காற்று | 15 | 128 | 348 | 272 |
| மொத்தம் | 24,945 | 908 | 1,941 | 1,515 |

இ.நி.வ.அ.ச. இனால் வழங்கப்பட்ட திட்ட வசதியளித்தல் சேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன

- திட்ட அங்கீகார குழு மற்றும் மேன்முறையீட்டு குழுவினூடாக திட்டங்களுக்கான அவசியமான அனுமதியினை வழங்கல்
- திட்ட அங்கீகார செயல்முறையுடன் தொடர்புபட்ட விடயங்களில் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்
- புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி பிரிவுகளை பிரகடணம் செய்தல்
- புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி திட்டங்களின் நடவடிக்கைகளது முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்
- புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி செயல்முறையில் அரசாங்க உத்தியோகத்தர்களிடையே விழிப்புணர்வினை மேம்படுத்துதல்
- புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களின் தகவல் தரவுத்தளத்தினை இற்றைப்படுத்துதல்
- புதுப்பிக்கத்தக்க வலுத் திட்ட அபிவிருத்தி தொடர்பாக காணி கையகப்படுத்தல் விடயங்களில் தலையீடு செய்தல்

இ.நி.வ.அ.ச. இல் நிறுவப்பட்ட பூகோளவியல் தகவல் அமைப்பு முறையானது (பூ.த.அ.) புதுப்பிக்கத்தக்க வலுத் திட்டங்களின் நடவடிக்கைகளுக்கு வசதியளிப்பதுடன், பின்வருவன உள்ளடங்கலாக உறுதுணை தகவல்களை வழங்குகின்றது.

- சூரியசக்தி சாத்தியப்பாட்டு வரைபடம்
- காற்று சாத்தியப்பாட்டு வரைபடம்
- நதி மற்றும் ஊற்று வலையமைப்பு, ஆற்று வடிநிலம் மற்றும் குளங்கள் மற்றும் நீர்தேக்கங்கள்
- உருவரை தரவு மற்றும் எண்மின்நிலை எழுச்சி மாதிரி
- பாதை வலையமைப்பு
- மின்சார வலையமைப்பு
- 1 : 50,000 காணிப் பாவனை
- வன இட ஒதுக்கீடுகள்
- வன உயிரின ஒதுக்கீடுகள்

### சூரிய பல சங்கிராமய

துரிதப்படுத்தப்பட்ட கூரைமீதான சூரியசக்தி முறையான - சூரிய பல சங்கிராமய 2016 இல் ஆரம்பித்துவைக்கப்பட்டு 2018 இல் 100 மெகா வாட் மைற்கல்லை தாண்டியது. இது ஓர் விரைவான செயல்முறையில் சிற்றளவிலான சூரியசக்தி ஒளி மின்னழுத்த முறைமைகளை பரவலாக்குவதற்கான ஓர் தேசிய கொள்திறனை கையகப்படுத்தல். இந்த பிண்ணனியினுள், மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உறுதுணையுடன், பின்வருவனவற்றின் மூலம் ஓர் கூரைமீதான சூரியசக்தி முறைமைக் கொள்திறனான 261 மெகா வாட்சினை அடையமுடியும். குடியிருப்புகள், அரசாங்க கட்டிடங்கள், சமய நிறுவனங்கள், கைத்தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீதான 24,000 சூரியசக்தி ஒளி மின்னழுத்த முறைமைகளை தேசிய மின்தேக்கத் தொகுதியுடன் இணைத்து நிகர அளவிடல், நிகர கணக்கீடு மற்றும் நிகர-மிகை ஊடாக நாட்டின் வருடாந்த மின்சார கேள்வியின் 2.3% இனை சந்திக்கக்கூடியதாயிருந்தது. இது நாட்டில் பரவலான சூரியசக்தி ஒளி மின்னழுத்தத் துறையினை உருவாக்குவதற்கு வழி சமைத்ததுடன், 296 கம்பனிகள் இம்முயற்சியில் இணைந்து 7,600 நேரடியான தொழில் வாய்ப்புக்களை வழங்கியதுடன் அண்ணளவாக 5,000 நேரடியல்லாத தொழில் வாய்ப்புக்களையும் வழங்கின.



# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

### கூரைமீதான சூரியவலு ஒளிமின்னுமுத்த அமைப்புகளது அபிவிருத்தி




மூலம்: இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

இ.நி.வ.அ.ச. இன் தொழில்நுட்ப ஈடுபாடானது பொறியிலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களது பயிற்றுவிப்பு மற்றும் கொள்திறன் கட்டியெழுப்புதல் மற்றும் இலங்கை நியமங்கள் நிருவகத்துடன் (இ.நி.ந.) கூட்டிணைந்து சூரியசக்தி ஒளி மின்னழுத்த முறை உபகரணங்களுக்கு அவசியமான அனைத்து தொழில்நுட்ப நியமங்களை பிரசுரிப்பதனையும் உள்ளடக்கும். தேசிய பணிப்பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினூடாக (தே.ப.கை.ப.அ.ச.) சூரியசக்தி ஒளி மின்னழுத்த தொழில்நுட்பத்தில் முறையான தொழில்நுட்ப கல்வி வழங்கப்பட்டது. சூரியசக்தி உருவாக்கலுக்கு செல்லும் அரச நிறுவனங்களுக்கு நேரடி தொழில்நுட்ப உறுதுணை வழங்கப்பட்டது.



இ.நி.வ.அ.ச. ஆனது கூரைமீதான சூரியசக்தியில் அதன் நோக்கெல்லையினை விரிவாக்குகின்றது. ஏனெனில், அது குறைவான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பின்விளைவுகளைக் கொண்ட ஓர் பெறுமதிமிக்க மாற்றீட்டு மூலமாகும். இந்த முயற்சியில் ஓர் முக்கியமான உறுப்பாக இலங்கையில் கலப்பின அலைமின்மாற்றியின் அறிமுகமாகும். இலங்கையின் மின்சார தொகுப்பிற்கு ஓர் பொருத்தமான சூரியசக்தி சேமிப்பு முறைமையினை குறிப்பிடும் கருமமானது ஓர் தொழில்நுட்பக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூரைமீதான சூரியசக்தி முறைமைகளினாலான விநியோக வலையமைப்புகளின் ஆழ்ந்த ஊடுருவலுடன் இணைந்த சிக்கல்கள், நீண்ட வாழ்நாள் மின்கலனுடன் தளத்திலான வலு சேமிப்பு முறைமையினை வைத்திருப்பதன் மூலம் சாதாரணமாக தீர்த்துவைக்கப்படுகின்றது.

### தேசிய வலுப் பூங்கா – அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டை புதுப்பிக்கத்தக்க வலு பூங்காவின் சூரியசக்தி உருவாக்கல் செயல் விளக்க வசதியானது தொடர்ச்சியாக பல்கலைகழக மாணவர்கள், மாணவர்கள் மற்றும் துறையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள தொழில்நுட்ப பணியாட்களுக்கு பயிற்சியினை வழங்குவதுடன் 1 GWh பசுமை வலுவினையும் உருவாக்குகின்றது.



### சர்வதேச நீர்மின்வலு பயிற்சி மத்திய நிலையம் - இந்துராண

நுண் நீர்மின்வலு துறையில் மற்றுமோர் மைற்கல்லை கடந்ததுடன், இத்துறையானது இலங்கையிலிருந்து உலகத்திற்கு நிபுணத்துவத்தினை வழங்குகின்றது. நீர்மின்வலு ஊக்குவிப்பிற்கு சரச்சந்திர ராஜகருண சர்வதேச மத்திய நிலையம் - ஓர் சர்வதேச பயிற்றுவித்தல் வசதியானது இந்துராணவிலுள் இ.நி.வ.அ.ச. இன் நுண் நீர்மின்வலு செயல்விளக்க பொறி தொடர்பாக நிறுவப்படலாம்.



# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

### வளங்களது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டமிடல்

புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி திட்டத்தின் முக்கிய பிரிவுகளில் ஒன்றாக பல்வேறு புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை இனங்காணுதல், சாத்தியப்படக்கூடிய தளங்களை ஆராய்தல் மற்றும் அபிவிருத்தி செயல்முறையினை விருத்திசெய்தல் காணப்படுகின்றது. உயிர்க்கூள வளங்கள் மதிப்பீடு, காற்று வளங்கள் மதிப்பீடு, அலை வலு வளங்கள் மதிப்பீடு, புதுப்பிக்கத்தக்க வலு வளங்களது வரைபடத்தினை விருத்திசெய்தல் மற்றும் வளங்களது இருப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தி திட்டங்களின் தொகுப்பு என்பன இதன் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) உயிர்க்கூள வள மதிப்பீடு**

முன்னைய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட உயிர்க்கூள வலு வள மதிப்பீட்டு கற்கையானது நிறைவுசெய்யப்படலாம். இங்கு வலு வளங்களுக்கான வரைபடங்களது தொகுப்பிற்கு தேவையான தரவுகள் மற்றும் தகவல்கள் கிடைக்கப்பெறக் கூடியதாயிருந்தது. உயிர்க்கூள வலு வளங்கள் பிரதானமாக இரண்டு வகைப்படும் - தனிப்பயன் வலு பெருந்தோட்டத்துறை, இது 'தெந்த்ரோ' வளங்கள் என குறிப்பிடப்படுவதுடன் மற்றும் விவசாய எச்சங்கள் என்பனவாகும்.

**உயிர்க்கூள அடர்த்தி - வலு பெருந்தோட்டத்துறை**




**உயிர்க்கூள அடர்த்தி - விவசாய எச்சம்**



# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

**(ஆ) காற்று வள மதிப்பீடு**

கடந்த வருடங்களில் அமுல்படுத்தப்பட்ட காற்று வள மதிப்பீடானது நாட்டில் உயர் காற்று வலு சாத்தியப்படக்கூடிய இடங்களில் காற்று வலு வள தரவுகள் கிடைக்கப்பெறுவதனை விளைவித்தது. இது தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் மன்னார் காற்று வலுத் திட்டம் போன்ற பாரிய அளவிலான காற்று மின்வலு திட்டங்களுக்கு துணைபுரிந்துள்ளது. இந்தத் தரவானது புதுப்பிக்கத்தக்க வலு வள வரைபடத்தினை உருவாக்குவதில் விரிவாக பயன்படுத்தப்பட்டும் உள்ளது. காற்று மின்வலு திட்ட அபிவிருத்தியில் மிகவும் எதிர்பார்க்கப்படும் தோற்றங்களில் ஒன்றாக நிகழ்நேர தளத்தரவு கிடைக்கப்பெறுதல் மற்றும் எதிர்வரும் காலங்களில் உயர் காற்று மின்வலு கொள்திறன் சேர்க்கைகள் இலக்குவைக்கப்பட்டுள்ளதனால் மேலதிக காலங்களுக்கான தொடர்ச்சியான தரவுகள் மிகவும் பயனுள்ளதாய் இருக்கும். எனவே, நாட்டின் பல்வேறு பாகங்களில் நிறுவப்பட்ட காற்று அளவிடல் கம்பங்களை உள்ளடக்கிய தேசிய காற்று குறிப்பு வலையமைப்பினை பயன்படுத்தி நாடு பூராவும் காற்று வள மதிப்பீடானது தொடர்ந்தது.

**(இ) அலை வலு வள மதிப்பிடு**

அலை வலு நாட்டில் வெளித்தோன்றும் புதுப்பிக்கத்தக்க வலு வளங்களில் ஒன்றாகும். சிறிய அளவிலான ஆய்வு வகையான தலையீடுகள் தவிர இந்த வளத்தினை விருத்தி செய்வதற்கு பாரிய முயற்சிகள் ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த வளத்தினை விருத்திசெய்வதற்கான ஓர் ஆரம்ப படியாக, ஓர் அலை வலு வள மதிப்பீடானது பேராதனை பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியல் திணைக்களத்துடன் கூட்டிணைந்து மேற்கொள்ளப்பட்டது.

**காற்று வள வரைபடம் (100மீற்றர் உயரத்தில் சராசரி காற்றின் வேகம்**




*(மூலம்: உலகளாவிய காற்று நிலப்படத்தொகுதி 3.0)*

**இலங்கை அலை வலு வள மதிப்பீடு**



# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

### புதுப்பிக்கத்தக்க வலு வள இருப்பு மற்றும் வள வரைபடங்கள்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 07 ஆம் பிரிவுடன் இணங்கியொழுகுவதனை மேற்கொள்ளல், புதுப்பிக்கத்தக்க வலு வள வரைபடம் மற்றும் புதுப்பிக்கத்தக வலு வள இருப்பு என்பன தொகுக்கப்பட்டன.




### புதுப்பிக்கத்தக்க வலு வள அபிவிருத்தித் திட்டம்




இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 08 ஆம் பிரிவானது ஓர் விரிவான புதுப்பிக்கத்தக்க வலு வள அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிப்பதற்கான ஏற்பாட்டினை வழங்குகின்றது. இது அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், செய்தித்தாள்களில் இத்திட்டத்தினை பிரசுரிப்பதனூடாக இதற்கான கருத்துக்களை பொதுமக்களிடமிருந்து அமைச்சர் வரவேற்பார். இச்செயல்முறையானது பின்பற்றப்பட்டு வரைவுத் திட்டமானது பொதுமக்களது கருத்துக்காக பிரசுரிக்கப்பட்டது. மீளாய்வு கட்டத்தின்போது, காணி ஒதுக்கீட்டில் உள்ளாகியுள்ள செயல்முறைகளும் மேலும் மீளாய்விற்கு உட்படும். மேலும், வளங்களின் கிடைப்புத்தன்மை, காணிகளை பெற்றுக்கொள்வதற்கான சாத்தியம் மற்றும் மின்செலுத்தம் முறையின் கிடைப்புத்தன்மை என்பன மேலும் கருத்திலெடுக்கப்படுகின்றது. இதற்கமைய, காணிகள் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக இ.மி.ச. மற்றும் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்களில் மிகவும் நடைமுறை மட்டத்தில் இவ்விடயத்தில் கவனஞ்செலுத்த எதிர்பார்ப்பதுடன் மீளாய்வின் பின்னர் திட்டத்தினை பிரசுரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நான்கு புதுப்பிக்கத்தக்க வலு வளங்காளான, நீர்மின்வலு, உயிர்க்கூளம், சூரியசக்தி மற்றும் காற்று என்பன இதன் கீழ் கவனத்திலெடுக்கப்பட்டன.

### வலு பூங்காக்களில் ஆரம்ப அபிவிருத்தி தலையீடுகள் திட்டங்கள்

100 மெகா வாட் அல்லது அதற்கு மேற்பட்டவை போன்ற பாரிய அளவிலான சூரியசக்தி மற்றும் காற்று வலுத் திட்டங்களின் அபிவிருத்தியானது போட்டித்தன்மையுடைய விலைகளில் சர்வதேச முதலீட்டாளர்களை கவரும். எனவே, குறிப்பிட்ட அளவிலான திட்டங்களை வலு பூங்காக்களாக அமுல்படுத்துவதற்காக முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கேற்றாற்போல் பூநேரி சூரிய சக்தி-காற்று கலப்பு வலுப் பூங்கா மற்றும் சியம்பலாந்துவ சூரியசக்தி வலு பூங்கா என்பன முதலாவது இரு முன்னெடுப்புகளாகும்.

**(அ) பூநேரி சூரியசக்தி – காற்று கலப்பு வலுப் பூங்கா**

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநேரி பகுதியானது காற்று மற்றும் சூரியசக்தி வலு அபிவிருத்திக்கான ஓர் வாய்ப்புள்ள பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. பூநேரி பகுதியில் 240 மெகாவாட் மற்றும் 800 மெகாவாட் கொள்ளளவுடைய காற்று வலு மற்றும் சூரியசக்தி வலு பொறித்தொகுதிகளை விருத்திசெய்வதற்கான அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் தனியார் அங்கமான சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனம் மற்றும் நிதி அமைச்சின் பொது-தனியார் பங்குடைமைக்கான தேசிய முகவரமைப்புடன் கூட்டிணைந்து இ.நி.வ.அ.ச. இனால் ஆரம்ப திட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன.



*பூநேரி சூரியசக்தி-காற்று கலப்பு வலுப் பூங்கா*

# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

இத்திட்டத்திற்கு ஓர் முன்-இயலுமை கற்கையானது நடாத்தப்பட்டதுடன், இங்கு 130 மெகாவாட் சூரியசக்தியினை விருத்திசெய்வதற்கும் திட்டத்தின் முதலாம் பகுதியாக 240 மெகாவாட்டினை விருத்திசெய்வதற்கும் முன்மொழியப்பட்டது. இந்த திட்டங்களுக்கான நேரடி முதலீடாக அமெரிக்க டொலர்கள் 146 மில்லியன் மற்றும் அமெரிக்க டொலர்கள் 249 மில்லியன் மதிப்பிடப்பட்டுள்ளன. கிளிநொச்சி மின்தொகுப்பு துணைமின் நிலையத்துடன் இணைக்கப்படவுள்ள சூரியசக்தி பொறித்தொகுதியானது முதலாவதாக முன்மொழியப்பட்ட 132 கிலோவாட் மின்செலுத்தத் தொடரூடாக நிறுவப்படும். இரண்டாவது கட்டத்தில், இது 220 கிலோ வாட்டாக தரமுயர்த்தப்பட்டு வவுனியா மின்தொகுப்பு துணைமின் நிலையத்துடன் இணைக்கப்படும். கொழும்பு பல்கலைக்கழகத்துடன் கலந்தாலோசித்து திட்டத்திற்கான பறவை கற்கையானது நிறைவுசெய்யப்பட்டது.

இத்திட்டமானது முழுவதுமாக அமுல்படுத்தப்படும்போது தேசிய மின்தொகுப்பிற்கு 1,120 GWh மின்சாரத்தினை சேர்க்கக்கூடியதாயிருக்கும். இதற்கும் மேலாக, வருடாந்தம் 845,462 தொன் கரியமில வளிம வெளிப்பாட்டின் குறைப்பினையும் அடையக்கூடியதாயிருக்கும்

**(ஆ) சியம்பலாந்துவ சூரியசக்தி வலு பூங்கா**



வலுப் பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், முதலாவது 100 மெகாவாட் சூரியசக்தி பூங்கா மொனராகல மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவுள்ளது. மொனராகல மாவட்டத்திலுள்ள 124/எச் கொட்டியாகல கிராம சேவகர் பிரிவில் சியம்பலாந்துவ பிரதேச செயலகத்தில் திட்டத்திற்காக இனங்காணப்பட்ட 500 ஏக்கர்கள் பகுதி அமைந்துள்ளது. இந்த திட்டத்திற்கான காணியின் நகலெடுத்தல் (மொனராகல மாவட்ட நில அளவை திணைக்களத்தினால் எல்லை மேற்கொள்ளல்) நிறைவு செய்யப்பட்டுள்ளது. காணிப் பாவனைக் குழு மற்றும் மொனராகல மாவட்ட நீர்பாசனத் திணைக்களம் போன்றவற்றிலிருந்து பல அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் தொல்பொருளியல்சார் பெறுமதி மற்றும் நீர் கிடைப்புத்தன்மை தொடர்பாக கற்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட தலைப்புடைய பகுதியில் அனுபவம் வாய்ந்த ஓர் ஆலோசனை நிறுவனத்திடமிருந்து தொழில்நுட்ப உதவியினைப் பெற்று ஓர் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு நடாத்தப்பட்டது.

**வலுக் கொள்கை மற்றும் ஆய்வு**

எதிர்வரும் காலங்களில் சூரியசக்தி மற்றும் காற்று வலு என்பன புதுப்பிக்கத்தக்க வலு அடிப்படையிலான மின்வலு பொறித்தொகுதியின் கொள்திறனது சேர்க்கைக்கு ஆகக்கூடிய பங்களிப்பினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், பாரிய அளவில் இந்த வளங்களை பயன்படுத்தி உருவாக்கப்படும் மின்சாரத்தினை உள்ளீர்ப்பதில் இந்த வளங்களின் இடைவிட்டு இயங்கும் தன்மையானது சிரமங்களை உருவாக்குகின்றன. எனவே, நடைமுறை தறுவாயில் இது ஆய்விற்கான ஓர் பாரிய பகுதியாகும். இது தொடர்பாக, மின்தொகுப்பிற்கு சூரியசக்தி வலுவினை ஒருங்கிணைப்பதில் இரண்டு ஆய்வுத் திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டன. இது இடைவிட்டு இயங்கும் தன்மையுடைய சூரியசக்தியினால் உருவாக்கப்படும் சிக்கல்களுக்கான தீர்வுகளை இனங்காண்பதற்காக ஆகும். இது பேராதனை பல்கலைக்கழகத்தின் மின் மற்றும் மின்னணுவியல் திணைக்களத்துடன் கூட்டிணைந்து நடாத்தப்பட்டது.

**(அ) நேரடி மின்சார நுண் மின்தொகுப்பினூடாக சூரியசக்தி ஒளிமின்னழுத்தத்தின் வலு செயற்திறன் பயன்பாட்டிலான ஆய்வுத் திட்டம்**

நேரடி மின்சார நுண் மின்தொகுப்பினூடான சூரியசக்தி ஒளிமின்னழுத்தத்தின் வலு செயற்திறன் பயன்பாட்டிலான ஆய்வுத் திட்டமானது பின்வரும் குறிக்கோள்களுடன் மேற்கொள்ளப்பட்டது.

- ஓர் பயன்பாட்டு இணைப்பு, ஒளிமின்னலுத்த பலகங்கள் மற்றும் வலு சேமிப்பு அலகு என்பவற்றுடன் ஓர் நேரடி மின்சார நுண் மின்தொகுப்பின் வடிவமைப்பு கட்டுப்பாடு மற்றும் செயற்பாட்டிலான ஆராய்விற்காக
- நேரத்திலான மாற்றமடையும் பளு மற்றும் வலு சேமிப்பிலான புதுப்பிக்கத்தக்க வெளிப்பாடு என்பவற்றின் தாக்கத்திலான ஆராய்விற்காக
- நேரடி மின்சார நுண் மின்தொகுப்பில் மிக மேன்மையான மின்தேக்கிகளது பிரயோகத்திலான ஆராய்விற்காக
- மின்சாரப் பாவனையில் தங்கியிருப்பதனை குறைப்பதற்காக சேமிப்புக் கொள்திறனை கட்டுப்படுத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டினை அதிகரிக்கும் ஓர் வலு முகாமைத்துவ முறையிலான ஆராய்விற்காக

இந்த கற்கையின் பிரகாரம், ஓர் நேரடி மின்சார-நேரடி மின்சார நேர்மின்மாற்றியினூடாக ஓர் நேரடி மின்சார வலையமைப்பிற்கு ஒளிமின்னழுத்தத்தினை இடைமுகப்பு செய்தல் 10% இற்கும் அதிகமான வலு சேமிப்பினை கொண்டுவருவதாக அவதானிக்கப்பட்டது. ஓர் நேரடி மின்சார வலையமைப்புடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி ஒளிமின்னழுத்தத்திலிருந்து ஆகக்கூடிய ஆதாயத்தினை பெற்றுக்கொள்வதற்காக நேரடி மின்சார மின்கடத்தியினைக் கொண்ட ஒளி உமிழ் இருமுனைய விளக்குகள், கணனி உபகரணம் மற்றும் காற்றுப்பதனிகள் என்பன நேரடியாக நேரடி மின்சார மின்கடத்தியுடன் இடைமுகப்பு செய்யப்படல் வேண்டும். மேலும், ஒரு வங்கியிலுள்ள ஒளிஉமிழ் இருமுனைய விளக்குகள், கணனி உபகரணங்கள் மற்றும் காற்றுப்பதனிகள் என்பன சூரியசக்தி ஒளிமின்னழுத்தத்தினால் வலுவளிக்கப்படும் ஓர் நேரடி மின்சார வலையமைப்புடன் இணைக்கப்பட்டிருக்குமாயின், மாற்று மின்சார முறைகளை பயன்படுத்தும் மரபுசார் செயற்பாட்டுடன் ஒப்பிடும்போது மின்சார பட்டியலானது குறைந்த மீள்செலுத்தல் காலங்களுடைய ஓர் சூரியசக்தி பலகத்துடன் நிகர்படுத்த முடியும். மேலும், வலு சேமிப்பு முறைமைகளை பயன்படுத்தி கட்டிடங்கள் மற்றும் மின்தொகுப்பின் இனங்காணப்பட்ட பூகோளவியல் எல்லைகளிலுமுள்ள சூரியசக்தி வலுவின் உகந்த பயன்பாட்டினை பெறுவதற்காக வலு முகாமைத்துவ முறைகளை பயன்படுத்தி முறைமைகளின் உயரிய பயனை அடையும் தேவை காணப்படுகின்றது. இத்தறுவாயில், நேரடி மின்சார நுண் மின்தொகுப்பானது ஓர் பொருத்தமான தொழில்நுட்ப இடையீடாக காணப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் முறைமைகளது உயரிய பயன்பாட்டிற்காக பல்வேறு உருவமைப்புகளது செய்முறை நுண்ணறிவினை திட்டத்தின் விளைவு வழங்கும்.

# வழங்கல் பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

**(ஆ) ஒளிமின்னழுத்தத்தின் பாரியளவு பயன்பாட்டுடன் வழங்கலின் பாதுகாப்பிலான ஆய்வுத் திட்டம்**

இலங்கையில் ஒளிமின்னழுத்தத்தின் பாரியளவு பயன்பாட்டுடன் வழங்கலின் பாதுகாப்பிலான ஆய்வுத் திட்டமானது பின்வரும் குறிக்கோள்களுடன் மேற்கொள்ளப்பட்டது.

- பொருத்தமான ஒட்டுறவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி இலங்கையின் சூரியசக்தி வலு முறைமைகளுடன் இணைக்கப்பட்ட மின்வலு பொறித்தொகுதிகளில் சூரியசக்தி ஒளிமின்னழுத்த வலு விளைவு வேறுபாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் எண்ணளவிடுதல்.
- உருவாக்கத்தின் நிச்சயமற்றதன்மைகள் மற்றும் உள்ளுறைந்த கேள்வி என்பவற்றை கருத்திலெடுப்பதன் மூலம் இலங்கையின் வலு முறைமைகளின் ஒதுக்கத் தேவைப்பாடுகளை மதிப்பீடு செய்தல்
- மாற்றமடையம் தொகையிலான புதுப்பிக்கத்தக்க உருவாக்கத்துடன் இலங்கையின் வலு முறைமைகளை வடிவமைத்தல் மற்றும் இயங்காற்றல் கற்கைகளை மேற்கொள்ளல்



இந்த கற்கையின் பிரகாரம், பளு மாறுந்தன்மைக்கான மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய முறைமைப்படுத்தல் ஒதுக்கமானது 2018-2028 காலப்பகுதியில் 2.8% முதல் 4.7% வரை காணப்படுமெனவும், 2020 இற்கு அப்பால் புதுப்பிக்கத்தக்க வலு பங்களிப்பானது 10% இலிருந்து 20% வரை உயர்த்தப்பட்டும், மொத்த முறைமைப்படுத்தல் ஒதுக்கத் தேவைப்பாடானது சராசரியாக 4.45% இலிருந்து 7.5% வரை காணப்படுமெனவும் அறியப்பட்டுள்ளது. சூரியசக்தி எதிர்வுகூறலிலான நிச்சயமற்றதன்மையினை கருத்திலெடுக்கும் வேளை ஒதுக்கம் மற்றும் ஒதுக்கத்திற்கான செயற்பாட்டு கிரயத்தினை மதிப்பிடுவதற்காக மூன்று முறைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், நிகர் பளுவிற்கான ஓர் துல்லியமான மதிப்பீட்டிற்கான முறைமையானது சிறந்த துல்லியத்துடன் சூரியசக்தி ஒளிமின்னழுத்த உருவாக்கத்தினை எதிர்வுகூறும் தேவைப்பாட்டினை கொண்டுள்ளது. மேலும், இயங்காற்றல் ஒதுக்க விளிம்பின் பயன்பாடானது ஆகக்குறைந்த செயற்பாட்டு கிரயத்தினை உறுதிப்படுத்துவதுடன் ஆகக்குறைந்த அளவிலான ஒதுக்கத்தினை பேணுவதனையும் வேண்டுகின்றது.




### விதுல்கா தேசிய வலு கருத்தரங்கும் மற்றும் புத்தாக்க மன்றம்

விதுல்கா தேசிய வலு கருத்தரங்கானது பல்கலைகழகங்களிலுள்ள ஆய்வாளர்களிடமிருந்து, ஆய்வு நிருவகங்களிலிருந்து, தொழில்சார் அங்கங்கள் போன்றவற்றிலிருந்து உள்ளீடுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் நடாத்தப்பட்டது. இது நிலைபெறுதகு வலு அபிவிருத்தி செயல்முறையில் அவர்களது ஆய்வு விளைவுகளை பலன்தரும் விதத்தில் பயன்படுத்துவதற்காகவும் நடாத்தப்பட்டது. வலுவின் பன்முகமான தலைப்பு பிரிவுகள் உள்ளடங்களாக ஓர் பரவலான தோற்றமான ஆய்வு பத்திரிகைகள் இக்கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்டன. அவை, வலு கொள்கை மற்றும் திட்டமிடல், மின்சார பொறியியல், அனல்மின் வலு முறைமைகள், வேதியல் பொறியியல், வலு முகாமைத்துவம், உயிர்க்கூள வலு, சூரியசக்தி வலு, அலை வலு மற்றும் புவிவெப்பநிலை வலு என்பவையாகும். புதுப்பிக்கத்தக்க வலு தொழில்நுட்பங்களை தழுவும்போது புத்தாக்கங்கள் ஓர் முக்கியமான தோற்றமாக காணப்படுகின்றது. இவ்வருடத்தின் புத்தாக்க மன்றமானது சூரியசக்தி வலுவிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. சூரியசக்தி மின்சாரம் மற்றும் சூரியசக்தி அனல்மின் முறைமைகளில் பெறுமதிமிக்க புத்தாக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

### வலு கொள்கைகளது உருவாக்கம்

இ.நி.வ.அ.ச. ஆனது மின்சக்தி மற்றும் வலு அமைச்சுடன் இணைந்து வலுத் துறை தொடர்பான தேசிய கொள்கைகளை உருவாக்கியது. இலங்கை தேசிய வலு கொள்கை மற்றும் மூலோபாயங்கள் 2019 இல் பிரசுரிக்கப்பட்டது. இது வலுத் துறையில் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைளது சூழமைவில் மிகவும் பெறுமதிமிக்க படியாகும் என்பதுடன், முக்கியமாக நிலைபெறுதகு வலு அபிவிருத்தி பகுதியிலாகும். இது கொள்கை அபிவிருத்தி உந்துகையின் கீழ் வரும் ஓர் முக்கிய இடையீடாகும் என்பதுடன் இது இ.நி.வ.அ.ச. இன் ஓர் முக்கிய குறிக்கோளாகும்.

கூரைமீதான சூரியசக்தி

**261 MW**

இணைக்கப்பட்டுள்ள கணக்குகள்

**24,696**

புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றிலான உலகளாவிய போக்குகளினால் ஊக்கமூட்டப்பட்டு வதிவீட்டாளர்களினது சூரிய சக்தி பயன்பாடு 2019 இல் ஓர் அதிகரிப்பினை கண்டது.



# கேள்வி பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

### வலு செயற்திறன் மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு

வலு பாதுகாப்பு பகுதியில், பின்வரும் மூன்று பிரிவுகளின் கீழ் வர்த்தக, கைத்தொழில் மற்றும் வீட்டுக்குரிய துறைகளை முன்னிறுத்தி திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

- முறைமைப்படுத்தல் இடையீடுகள்
- வலு செயற்திறன் சேவைகளை பலப்படுத்துதல்
- பயிற்சி மற்றும் விழிப்புணர்வு

2019 ஆம் வருடத்தில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் பின்வரும் பகுதிகளில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### வலு முகாமைத்துவ முறைமைகளின் நிறுவுதல்

இ.நி.வ.அ.ச. வர்த்தக, கைத்தொழில் மற்றும் வீட்டுக்குரிய துறைகளில், வலு முகாமைத்துவ திட்டம், வலு கணக்காய்வு திட்டம், வலு நுகர்வு மட்டக்குறிகளை நிறுவுதல் போன்ற நீண்டகால திட்டங்களினூடாக வலு பாதுகாப்பிற்கு வசதியளிக்கின்றது.

• வலு முகாமையாளர் திட்டம்
இவ்வாண்டில், இ.நி.வ.அ.ச. உத்தியோகத்தர்கள் பலதரப்பட்ட துறைகளிடையே வலு முகாமையாளர்களின் எண்ணிக்கையினை மூலோபாயமான விதத்தில் அதிகரிப்பதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இதன் பலனாக, 7 புதிய வலு முகாமையாளர்களுக்கு 2019 இல் சான்றளிக்கப்பட்டு இ.நி.வ.அ.ச. இனால் பதிவீடு செய்யப்பட்ட மொத்த வலு முகாமையாளர்களின் எண்ணிக்கை 223 ஆக அதிகரிக்கப்பட்டது. நிறுவனங்களினுள் வலு நுகர்வு மற்றும் விரயமானது செயற்திறனான விதத்தில் முகாமைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதில் வலு முகாமையாளர்கள் நீடிப்புத்திறன்மிக்க வலு முகாமைத்துவத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். நாளாந்த நடவடிக்கைகளினூடாக வலு விரயத்தினை குறைப்பதற்கு அவர்கள் பொறுப்பாளியாயிருப்பதுடன் இது உள்ளூர் கம்பனிகளில் கரிம அடிச்சுவட்டினை மேம்படுத்துதல் நோக்கி பங்களிப்பு செய்யும்.

• கட்டாயமான வலு பாதுகாப்பு முன்னெடுப்புகள்
அரசாங்க நிறுவனங்களினுள் வலு பாதுகாக்கப்படுவதில் ஓர் சுற்றுநிருபத்தினை வலு அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் இணைந்து இ.நி.வ.அ.ச. வெளியிட்டது. இது அரச நிறுவனங்களின் கட்டாயமான பங்குபற்றலை உள்ளடக்காத முன்னைய சுற்றுநிருபம் திருத்தியமைக்கப்பட்டதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பலனாக, ஒவ்வொரு அரச நிறுவனமும் ஓர் வலு முகாமையாளரை இனங்கண்டு நியமித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர் நிறுவனத்தினுள் வலு விரயம் ஆகக்குறைந்தளவுக்கு இருப்பதனையும் வலு செயற்திறன் மேம்படுத்தப்படுவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும். இ.நி.வ.அ.ச. இம்முயற்சி அரச நிறுவனங்களினுள் கணிசமானளவு வலு நுகர்வினை சேமிப்பதுடன் நாட்டில் ஒட்டுமொத்த வலு நுகர்வினை குறைப்பதற்கு துணைபுரியும் என நம்புகின்றது.

• வலு முகாமைத்துவத்தில் அரச துறை விழிப்புணர்வு
இ.நி.வ.அ.ச. உத்தியோகத்தர்களின் மேற்குறிப்பிட்ட முயற்சிகளுக்கு துணைபுரிவதற்காக மாவட்ட மட்டத்தில் ஓர் தொடரான செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் என்பன 2019 இல் நடாத்தப்பட்டன. இது வலு முகாமையாளர்களுக்கு அவர்களது பங்கு மற்றும் இலங்கையின் நீடிப்புத்திறனான வலு இலக்குகள் நோக்கிய அவர்களது பங்களிப்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் கற்பிக்கவும் மேற்கொள்ளப்பட்டன. மாத்தளையில் மூன்று செயலமர்வுகள் (130 பங்குபற்றுநர்கள்), பதுளை (200 பங்குபற்றுநர்கள்) மற்றும் மொனராகலை (100 பங்குபற்றுநர்கள்) என்பன இவ்வருடத்தில் இடம்பெற்றன.

• சான்றளிக்கப்பட்ட வலு கணக்காய்வாளர்களை பதிவுசெய்தல்
தனியார் மற்றும் அரசாங்க துறைகளில் வலு பாதுகாப்பு மற்றும் வலு முகாமைத்துவம் இரண்டையும் கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துவதில் வலு கணக்காய்வாளர்கள் முக்கியத்துவம் பெறுகின்றார்கள். 2019 இல் 2 வலு கணக்காய்வாளர்கள் சான்றளிக்கப்பட்டு வலு முகாமைத்துவத்தில் ஆலோசனை சேவைகளுக்கான சான்றளிக்கப்பட்ட வலு கணக்காய்வாளர்களது எண்ணிக்கை 20 ஆக அதிகரிக்கப்பட்டது.

### நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல்

கைத்தொழில், வீட்டுக்குரிய மற்றும் வர்த்தகம் போன்ற அனைத்து துறைகளிலும் வலு செயற்திறன் மேம்படுத்தலை முகாமைப்படுத்துவதற்கு முறைமைப்படுத்தல் இடையீடுகள் மற்றும் விழிப்புணர்வினை உருவாக்குதல் என்பன நிறுவப்பட்டதுடன் இ.நி.வ.அ.ச. பலதரப்பட்ட நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டன.

• 'இலங்கையில் நீடிப்புத்திறன் வலு வதிவிடங்களுக்கான வழிகாட்டி'
பல வருடங்களாக, நீடிப்புத்திறன் வலு நடவடிக்கைகளது அமுலாக்கமானது அனேகமாக கைத்தொழில் மற்றும் கூட்டாண்மை துறைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கடந்த சில வருடங்களில், குடியிருப்பாளர்களது புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டிற்கான மாற்றமானது அதிகரித்துள்ளதுடன் இது வலு பாதுகாப்பாளர்களாக வீட்டுக்குரிய துறையின் சிறந்த விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தினை குறிப்பிடுகின்றது. நீடிப்புத்திறனான வலு இலக்குகளை அடைவதில் வீட்டுக்குரிய துறையின் சாத்தியப்பாட்டினை அடைந்ததுடன், இ.நி.வ.அ.ச. 'இலங்கையில் நீடிப்புத்திறனுடைய வலு வதிவிடங்களுக்கான வழிகாட்டி' இனை முடிவுறுத்தி வெளியீடு செய்தது. இது வதிவீட்டாளர்களுக்கு கட்டிடங்கள், அவர்களது இல்லங்களை வலு செயற்திறனான கட்டமைப்பாக மாற்றுவதற்கான வழிகாட்டிகளை வழங்கும். இதுவரைக்கும் இவ்வெளியீட்டின் 250 பிரதிகள் சுற்றனுப்பப்பட்டன.

'இலங்கையில் நீடிப்புத்திறனுடைய வலு வதிவிடங்களுக்கான வழிகாட்டி' இல் விழிப்புணர்வினை கட்டியெழுப்புவதற்காக இ.நி.வ.அ.ச. ஓர் பங்காளிகள் மன்றத்தினை ஒழுங்குசெய்தது. கட்டடக் கலைஞர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய துறைசார் பங்காளிகளிலிருந்து கட்டுமானத்துறை தொழில்வல்லுநர்கள் வலு செயற்திறனான வதிவிடங்களை கட்டியெழுப்புவதில் இந்த வழிகாட்டிகளை அவர்கள் எவ்வாறு ஒன்றிணைக்கலாம் என அறிவுறுத்தப்பட்டார்கள்.

• வலு குறியிடுதல்
உபகரணங்களது வலு குறியிடுதல் இ.நி.வ.அ.ச. இனால் அமுல்படுத்தப்பட்டு மற்றும் கண்காணிக்கப்படும் ஓர் முக்கிய ஒழுங்குவிதியாகும். வலுவினை பயன்படுத்தும் கருவிகள் மற்றும் உபகரணங்கள் அவற்றின் பயன்பாட்டில் மற்றும் அவற்றின் சந்தைப்படுத்தல் செயல்முறையில் சில நியமங்களை பின்பற்றுவதனை உறுதிப்படுத்துகின்றது. கருவியின் மேலுள்ள வலு குறியீடுகள் நுகர்வோருக்கு வலு நுகர்வின் தரப்படுத்தல் மற்றும் சிறந்த நடைமுறைகளுடனான அவற்றின் இணக்கப்பாடு என்பவற்றை குறிப்பிடும்.

# கேள்வி பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

கீழ்காணும் அட்டவணையானது 2019 இல் உபகரணங்களுக்கான வலு குறியீடுகளின் விளக்கமான முன்னேற்றத்தினை வழங்கும்:

| விளக்கம் | முன்னேற்றம் |
|---|---|
| LED பலகங்களுக்கான ஆகக்குறைந்த வலு செயற்திறன் நியமம் | • பொருத்தமான சர்வதேச நியமங்களை கொள்வனவு செய்தமை<br>• வெவ்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து LED கலங்களை, பரீட்சிக்கவும் மட்டக்குறியினை நிருவுவதற்கும் கொள்வனவு செய்தமை<br>• நியமங்களின் தயாரிப்பானது நடந்தவண்ணமுள்ளன. |
| கூரை மின்விசிறிக்கான வலு குறியீட்டு திட்டம் | • இலங்கை தரப்படுத்தல் நிருவகத்தில் நிறுவப்பட்ட பரீட்சித்தல் வசதியானது முழுவதுமாக தொழிற்படுகின்றமை<br>• கூரை மின்விசிறிகளை இறக்குமதி செய்யும் கம்பனிகளுக்கு கட்டாயமான வலு குறியீட்டின் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக ஓர் பங்காளிகள் மன்றத்தினை கூட்டியமை<br>• கூரை மின்விசிறி வலு குறியீட்டில் ஊடக உள்ளடக்கத்தினை உருவாக்குவதற்காக விலை கோரல்கள் அழைக்கப்பட்டு அப்பணி வழங்கப்பட்டது. |
| கணினிகளுக்கான வலு குறியீட்டுத் திட்டம் | • மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் ஓர் கணினி பரிசீலனை ஆய்வுகூடத்தினை நிறுவியமை<br>• கணினி உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு மனமுவந்த வலு குறியீடு பற்றிய விழிப்புணர்வினை மேற்கொள்வதற்காக பங்காளிகளிடையே ஓர் மன்றம் கூட்டப்பட்டு மனமுவந்த குறியீடு ஆரம்பித்து வைக்கப்பட்டது |
| குளிர்சாதனப் பெட்டிகளுக்கான வலு குறியீட்டுத் திட்டம் | • வரைவு நியமமானது முடிவுறுத்தப்பட்டு துறைசார் குழுவின் அங்கீகாரத்திற்காக இலங்கை தரப்படுத்தல் நிருவகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது<br>• பல மாதிரிகள் வலு செயற்திறன் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன |
| LED விளக்குகளுக்கான வலு குறியீட்டுத் திட்டம் | • கட்டாய MEPS குறியீட்டினை முறைமைப்படுத்துவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது |

### ஆலோசனை மற்றும் கருத்துரை வழங்கல் சேவைகள்

இ.நி.வ.அ.ச. ஆனது கைத்தொழில்கள், வர்த்தக மற்றும் அரச துறை நிறுவனங்களுக்கு அவற்றின் வலு தொடர்பான சிக்கல்களை தீர்த்து வைப்பதற்கு துணைபுரிகின்றது. இவர்களது கேள்விகளுக்கு மறுமொழி அளிப்பது மற்றும் வேண்டுதலின் பேரில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. வலு கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக நன்கு பராமரிக்கப்பட்ட கருவிகளது தொகுப்பானது வாடகைக்கு கிடைக்கக்கூடியதாயுள்ளது. வலு கணக்காய்வு மற்றும் வலு செயற்திறன் மேம்படுத்தல் திட்டங்களது அமுலாக்கல் என்பவற்றை மேற்கொள்வதில் குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதற்கு அதிகாரசபையானது வலுச் சேவைக் கம்பனிகளை பதிவுசெய்துள்ளது.

ஆலோசனை மற்றும் கருத்துரை வழங்குவதில் அமுல்படுத்தப்பட்ட சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

- கருவிகள் வாடகைக்கு விடப்பட்ட நாட்களின் மொத்த எண்ணிக்கை – 1710
- கருவிகள் தொகுப்பிற்கு 2 கையினால் பிடிக்கும் வலு மீற்றர்கள் மற்றும் 5 ஒளித்திறன் மீற்றர்கள் கொள்வனவு செய்யப்பட்டன
- மொத்தமாக இ.நி.வ.அ.ச. உடன் 44 வலுப் பாதுகாப்பு கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- 5 வலு கணக்காய்வுகளை, டொக்யார்ட் பி.எல்.சி., பிரதேச மருத்துவமனை, கல்லேவெல, பிரதேச பொது மருத்துவமனை மாத்தளை, தம்புள்ள நடாத்தினோம்
- DSI ரஜரட்ட தரையோடு தொழிற்சாலை வலு அளவீடு மற்றும் பகுப்பாய்வு
- 5 ISO 50001 வலு முகாமைத்துவ முறைமைகள் கணக்காய்வுகள் இலங்கை தரப்படுத்தல் நிருவகத்துடன் இணைந்து கிஸ்லேவ் குமி லங்கா (பிரைவேட்) லிமிட்டட், ஜெட்விங் லெகூன் ஹோட்டல், புனித அன்ரூஸ் ஹோட்டல் நுவரஹெலிய, இந்துருவ பீச் ரிசோர்ட், பெந்தொட்ட மற்றும் ஹெரிடன்ஸ் டீ வெக்டரி நுவரஹெலிய ஆகியவற்றில் நடாத்தப்பட்டன.
- தேசிய பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு அதிகாரசபைக்கு குளிரூட்டல் பளுவினை தீர்மானித்தல் மற்றும் காற்றுப் பதனி தெரிவு செய்தல்
- கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சினால் கைத்தொழில் வலயங்களில் 15 வலு கணக்காய்வுகளுக்கு ஆலோசனை வழங்கல்

### வலு தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களின் உருவாக்கம் மற்றும் பரப்புதல்

- வலு நிலுவை 2017 மற்றும் முக்கிய வலு புள்ளிவிபரங்கள் 2017 என்பவற்றின் தொகுப்பு நிறைவு செய்யப்பட்டது. வலு நிலுவை 2018 இல் தரவு சரிபார்த்தல் நடைபெற்றவண்ணமுள்ளது.

### ஆய்வு மற்றும் அபிவிருத்தி

இலங்கையில் வலு முகாமைத்துவ நடைமுறைகளின் அபிவிருத்திக்காக புதிய மற்றும் புத்தாக்கமான தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்கக்கூடிய சாத்தியத்தினை ஆராய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

தேயிலை ஆராய்ச்சி நிருவகத்தின் உறுதுணையுடன் தேயிலை வாடுகை தொட்டியின் ஓர் மூல அச்சினை வடிவமைத்ததுடன், நாளம், கதிர்வீசுக் கருவி, செயல்முறை கட்டுப்பாடு மற்றும் பரப்புதல் பொறிமுறை என்பவை திருத்தியமைப்பட்டன. இது வலு செயற்திறனை துல்லியமாக மதிப்பிடுவதற்கு உதவும்.

#### பியகமவிலுள்ள மூவுருவாக்கல் வசதி

பியகம ஏற்றுமதி செயற்பாட்டு வலயத்தில் சாத்தியமான வலு உயர்பயன்பாடு மற்றும் வலு விரயத்தினை குறைப்பதற்கான ஓர் முன்னோடித் திட்டத்தினை இ.நி.வ.அ.ச. நடாத்தியது. இத் திட்டமானது தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலைகளில் இடம்பெறும் உற்பத்திசெய்யப்படும் வகைகள் மற்றும் உற்பத்தி செயல்முறைகள் மற்றும் இந்த ஒவ்வொரு கட்டத்திலும் காணப்படும் வலு பயன்பாடு என்பவற்றை கணக்கிலெடுத்தது. இத் திட்டமானது உற்பத்திச் செயல்முறைக்கான வலு உள்ளீட்டினையும் அதற்காக வெளியீடு செய்யப்படும் வலுவில் ஓர் கணிசமானளவு பகுதி குறைவாகப் பயன்படுத்தப்பட்டதனையும் இனங்கண்டது. இத் திட்டமானது மேலதிக மற்றும் ஓர் துணைப்பொருளாக விருத்திசெய்யப்பட்ட வலு எவ்வாறு கைத்தொழில்களின் வலு நுகர்வினை முகாமைப்படுத்துவதில் மேலும் உகப்பாக்குவது என்று ஆராய்ந்தது. இதன் விளைவாக, அனேகமான கைத்தொழில்களில் விருத்திசெய்யப்படும் மத்திய அனல்மின் வலு ஓர் பெறுமதிமிக்க வலு வளமாக இனங்காணப்பட்டதுடன், இது கைத்தொழில் செயல்முறைகளின் மீளப்பயன்படுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

# கேள்வி பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

ISB குருணாகலவின் ஒத்தாசையுடன் ஓர் மூவுருவாக்கல் வசதிக்கான ஓர் இயலுமை கற்கை நடாத்தப்பட்டது. இது கைத்தொழிலினுள் மீள்பயன்படுத்துவதற்கான சாத்தியமான பல்வகைப்பட்ட உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு வலு வளங்களை ஆராய்ந்ததுடன், இதன் மூலம் வலு விரயத்தினை குறைத்து பல பயன்பாட்டினை உகப்பாக்குதலையும் ஆராய்ந்தது. இறுதி அறிக்கையானது இ.நி.வ.அ.ச. க்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இது கைத்தொழில் வலயங்களுக்கான ஓர் மத்திய அனல்மின் வலு வழங்கல் பயன்பாட்டின் நன்மைகளையும் அத்தோடு சேர்க்கப்பட்ட தளத்திலான பல உருவாக்கல் ஆற்றலினையும் எடுத்துக்காட்டுகின்றது.

### செயற்பாட்டு கேள்வி பக்க முகாமைத்துவ (செயற்பாட்டு கே.ப.மு.) திட்டம்

EEI மற்றும் C திட்டத்தினை வடிவமைத்து அமுலாக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ள இ.நி.வ.அ.ச. ஆனது செயற்பாட்டு கேள்விப் பக்க முகாமைத்துவம் (செயற்பாட்டு கே.ப.மு.) எனப் பெயரிடப்பட்ட ஓர் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தினை முன்னெடுத்தது. இது வலு கேள்விப் பக்க முகாமைத்துவத்தில் ஜனாதிபதி செயலாக்கக்குழுவின் (வ.கே.ப.மு. இல் ஜ.செ.கு.) வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு ஓர் மிதமான வெற்றியினை அடைந்தது. 2017 இல் ஆரம்பித்துவைக்கப்பட்ட இத்திட்டமானது, திட்ட வடிவமைப்பில் எதிர்பார்க்கப்பட்ட நிதியியல் மற்றும் மனித வளங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எனினும், இத்திட்டமானது பல்வேறு கட்டுப்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டது. இ.நி.வ.அ.ச. இனால் இனங்காணப்பட்ட பத்து உந்துதல் பிரிவுகளில் வலு கேள்வியினை குறைப்பதற்கான அதன் நிலைமையின் ஓர் சுருக்க விளக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

**செயற்திறனான காற்றுப் பதனிடல்**

அறை காற்றுப் பதனிகளை பரிசீலிப்பதற்கான ஓர் பரீசீலனை வசதியினை உருவாக்குதல் மற்றும் சர்வதேச நிதியளிப்பிற்கான ஓர் பிரேரணை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**செயற்திறனான ஒளியூட்டம்**

100 வர்த்தகக் கட்டிடங்களிலான ஓர் கற்கை நிறைவு செய்யப்பட்டது. இக்கற்கையானது, ஒளியூட்டி மாற்றியமைப்புடன் வருடாந்தம் அண்ணளவாக 515 GWh மின்சார வலுவினை சேமிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக காட்டியது.

**செயற்திறனான குளிர்சாதனப் பெட்டிகள்**

பயன்படுத்தப்பட்ட 10,000 குளிர்சாதனப் பெட்டிகளை மாற்றீடு செய்வதற்கான ஓர் முன்னோடித் திட்டம் விருத்திசெய்யப்பட்டுக்கொண்டுள்ளது. இத் திட்டமானது பழைய குளிர்சாதனப் பெட்டிகளை மாற்றீடு செய்வதற்கான ஓர் ஊக்குவிப்பாக வாடகைக் கொள்வனவு தவணைக் கொடுப்பனவுகளை மின்சாரப் பட்டியலுடன் வழங்குவதனை நோக்காகக் கொண்டதாகும். பழைமையான குளிர்சாதனப் பெட்டிகளிலிருந்து அகற்றப்பட்ட குளிரூட்டிகளை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியப்படுத்தல் உருளைகளின் கொள்வனவானது நடந்தவண்ணமுள்ளது.

**செயற்திறனான குளிரூட்டிகள்**

ஓர் நிதியளித்தல் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் இது அபிவிருத்தி பங்காளியினால் கருத்திலெடுக்கப்படவில்லை. இது ஏனைய அபிவிருத்தி பங்காளிகளை இலக்குவைத்து இருபக்க திட்டமாக மேலும் அபிவிருத்திசெய்யப்படும். எவ்வாறாயினும், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுடனான பங்குடையுடன் குளிரூட்டிகளை மாற்றீடு செய்யும் ஓர் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நடந்தவண்ணமுள்ளது.

**செயற்திறனான மின்னோடிகள் மற்றும் மாற்றமடையும் வேகமுள்ள இயக்கிகள்**

கைத்தொழில் துறையில் காணப்படும் தூண்டல் மின்னோடிகளது கற்கையொன்று மின்னோடி மாற்றீடு அணுகுமுறை மூலம் சிறந்த செயற்திறன் ஆதாயத்தினை அடையமுடியாது என்பதை வெளிக்காட்டியது. மாற்றமடையும் வேகமுள்ள இயக்கிகளை அறிமுகப்படுத்துவதற்கான ஓர் உறுதியளிக்கும் நோக்கெல்லையானது இதே கற்கையிலிருந்து வெளிக்கொணரப்பட்டது. மின்னோடி செயற்திறன் மேம்பாட்டினை அதிகரிப்பதற்கான ஓர் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் மதிப்பாய்வில் பங்குபற்றிய துறைகளினால் 3 பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இம்மூன்று பிரேரணைகளும் சேமிப்புகள் தேவையான முதலீட்டினை நியாயப்படுத்தாமையினால் நிராகரிக்கப்பட்டன.

**வெண்ணொளி விளக்குகளை நீக்குதல்**

இத்திட்டத்தின் முதற்கட்டம், மாதாந்தம் 30kWh க்கும் குறைவாக பயன்படுத்தும் குடும்பங்களை இலக்குவைத்து அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டமானது மிதமான வெற்றியினை அடைந்ததுடன், இரண்டு பயனமைப்புகளின் வெவ்வேறு விநியோக நிறுவனங்கள் வேறுபாடான அளவான கடப்பாட்டுடன் பதிலளித்தன. வலு பயன்பாட்டின் முன்னைய மற்றும் பின்னைய அமுலாக்கத்தின் பகுப்பாய்வானது நடந்தவண்ணமுள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில், முதலாவது ஒப்படையில் 35% மாத்திரமே கருதப்பட்ட இல்லங்களை எட்டியதாக தன்னியக்க அறிக்கையிடல் பொறிமுறையானது அறிக்கையிட்டது.

**செயற்திறனான மின்விசிறிகள்**

கட்டாயக் குறியிடல் திட்டமானது முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் நாட்டிற்கு செயற்திறனற்ற மின்விசிறிகளை இறக்குமதி செய்தல் தற்போது தடைசெய்யப்பட்டுள்ளது. உபகரணங்களது மதிப்பாய்வின் பரிசீலனைக்கு முன்னைய கட்டத்தின் விளைவானது நாட்டில் அனேகமான வதிவிடங்களில் பாரிய அளவிலான பழைய மின்விசிறிகள் செயற்படுவதனை குறிப்பிடுகின்றது. 6,357 வதிவிடங்களின் ஓர் பிரதிநிதித்துவ மாதிரியினை உள்ளடக்கிய நாடுபூராவுமான பரவலான இல்லங்களின் மதிப்பாய்விலிருந்தான தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் இந்த பழைமையான மின்விசிறி இருப்பினை மாற்றீடு செய்வதற்கான ஓர் இலக்குவைத்த திட்டமானது உருவாக்கப்பட்டுக் கொண்டுள்ளது.

'குடும்பத்தார் வீட்டுக்குரிய மின்சார உபகரண மதிப்பாய்வு (கு.வீ. மி.உ.ம.)' என தலைப்பிடப்பட்ட இந்த மதிப்பாய்வு ஆட்டொகைக் கணக்கு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் 2019 இன் இறுதியில் நடாத்தப்பட்டது. இது அனைத்து மின்சார உபகரணங்களது வகைகள், வயது, ஊடுருவல் மற்றும் பயன்பாட்டின் காலம், சமையல் வலுவிலான தகவல் மற்றும் வலு மற்றும் வலுவல்லாத பண்டங்களிலான ஏனைய குடும்பச் செலவுகள் போன்றவற்றில் ஓர் பரந்த அணியிலான தரவுகளை உருவாக்கியது. இந்த மதிப்பாய்வின் தரவுப் பகுப்பாய்வானது வெகுவிரைவில் நிறைவுசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் வதிவிடத் துறையிலிருந்தான கேள்வியின் மதிப்பீட்டிற்கான பெறுமதி மிக்க ஆய்வுத் தரவுகளை வழங்குகின்றது.

**பசுமைக் கட்டிடங்கள்**

கட்டிடக் குறியீட்டினை ஊக்குவிப்பதற்கான ஓர் திட்டம் வரையப்பட்டுக்கொண்டுள்ளது.

**சாமர்த்திய இல்லங்கள்**

கூரை மீதான சூரியசக்தி திட்டத்தின் பரந்த ஒப்புக்கொள்ளலானது இத்திட்டத்தின் இலக்குகளை எதிர்பார்த்ததிலும் பார்க்க முன்னதாகவே அடைவதனை காணக்கூடியதாயிருந்தது. எவ்வாறாயினும், சாமர்த்திய இல்லங்கள் தொடர்பான ஏனைய அம்சங்கள் எதிர்பார்த்தளவு அமுல்படுத்தப்படவில்லை.

**சக்தி ஆக்கக்கூறு மேம்படுத்தல்**

சக்தி ஆக்கக்கூறு திருத்தல் உபகரணத்தின் அனுகூலமான இடத்திலான ஓர் வரையறுக்கப்பட்ட கற்கை பொறுப்பேற்கப்பட்டது.

> சாத்தியமான வலு சேமிப்புகள் (kWh) மற்றும் கேள்வி சேமிப்புகள் (MW) இன் அண்ணளவான ஓர் மதிப்பீடானது இந்தத் திட்டமானது 2020 அளவில் 1,243 GWh இனை சேமிக்கமுடியும் எனவும் உருவாக்கல் விரிவாகில் ஓர் 417 MW கொள்திறனால் வேறுபடுகின்றது எனவும் குறிப்பிடுகின்றது.

# கேள்வி பக்க முகாமைத்துவ நடவடிக்கைகள்

### வலு கல்வித் திட்டம்

நிலைபெறுதகு வலுவில் பெருந்திரளான விழிப்புணர்வினை உருவாக்குதல் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளில் நீண்டகால தேக்கிவைப்பினை வேண்டுகின்றது. வலுவின் செயற்திறனான பயன்பாட்டினை பிரச்சாரம் செய்வதில் கல்லூரி மாணவர்கள் ஓர் முக்கிய பங்கினை வகிப்பதுடன், நிலைபெறுதகு வலுவிலான புதிய வாய்ப்புக்களைப் பற்றி சமூகத்தை கற்பிப்பதற்கான ஓர் பாரிய காரணத்தையும் வழங்கும். இது நோக்கி கல்லூரி மாணவர்கள் மேற்கொள்ளக்கூடிய அளவற்ற சாத்தியத்தினை கண்டுணர்வதுடன், இதில் கல்வி அமைச்சுடன் கூட்டிணைந்து கல்லூரி வலு கழகம் (க.வ.க.) பெருமையினை தட்டிக்கொண்டுள்ளது.

2015 முதல் கல்லூரி வலு கழகங்கள் நடாத்தப்பட்டதுடன் க.வ.கழகங்கள் நாடுபூராவுமுள்ள பாடசாலைகளில் நிறுவப்பட்டுள்ளன. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில், இத்திட்டத்தினை மேம்படுத்துவதற்காக, இத்திட்டமானது மீளாய்வு செய்யப்பட்டு 2019 இல் ஓர் திருத்தியமைக்கப்பட்ட திட்டமானது அமுல்படுத்தப்பட்டது. 9 மாகாணங்களிலுமுள்ள உரிய பாடசாலைகளில் விஞ்ஞான ஆசிரியர்கள் பயிற்றுவிப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டு, இதன் மூலம் அவர்கள் கல்லூரி வலுக் கழகங்களை பொறுப்பேற்கமுடியும். 2019 இல் இத்திட்டத்தின் கீழ் 1,250 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். இதன் விளைவாக, 700 வலுக் கழகங்கள் நிறுவப்பட்டு ஒன்பது மாகாணங்களிலும் மீள் பதவீடு செய்யப்பட்டன.







ஜனாதிபதி செயலகத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட 'ரட்ட வெனுவென் எகட்ட சிட்டிமு' நிகழ்ச்சித்திட்டத்தில் இ.நி.வ.அ.ச. ஈடுபட்டதுடன் அது மொனராகலை மாவட்டத்தில் 2019 ஜூலை 02 முதல் 05 வரை பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

### விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

- புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்தியிலான முக்கியத்துவம் மற்றும் வலு பாதுகாப்பு குறிப்பீடுகளை கற்பிப்பதற்காக மாகாண ஊடகவியலாளர்களுக்கு ஓர் வெளிப்பாடு வழங்கப்பட்டது. இது நுவரஹெலிய, கேகாலை, ரத்தினபுரி மாவட்டங்களில் இடம்பெற்றது.
- 2,500 சாரணர்களது பங்குபற்றலுடன் இடம்பெற்ற சாரணியர் கம்போரி நிகழ்ச்சித்திட்டத்தில் வலு செயற்திறன் தேர்ச்சி அடையாளக்குறிகள் வழங்கப்பட்டன.
- பாடசாலை மற்றும் பல்கலைக்கழக சமூகத்திற்கு இ.நி.வ.அ.ச. இனால் வழக்கமாக மேற்கொள்ளப்படும் நிகழ்வுகள் தொடர்பாக கற்பிப்பதற்காகவும் வலுத் துறை நடவடிக்கைகளை அவர்களுக்கு அறிப்படுத்துவதற்காகவும் காலாண்டு சஞ்சிகையான "சன்ரக்ஷா" பிரசுரிக்கப்பட்டது.



# கொடையாளி நிதியளிக்கப்பட்ட திட்டங்கள்

பசுமை இல்லா வாயுவைக் குறைப்பதற்கு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கத்திற்காக பாரிஸ் மாநாட்டினால் நிறுவப்பட்ட இலக்குகளை அடைவதில் பல வருடங்களாக கொடையாளி முகவர்களுடன் நிலைபெறுதகு வலு அதிகார சபை கூட்டாக செயலாற்றியது. கொடையாளி முகவர்கள் அதிகார சபைக்கு தொழில்நுட்ப உறுதுணை, பயிற்சி மற்றும் அறிவு மாற்றல் வாய்ப்புக்கள், நிதியளிப்புகள் மற்றும் வளங்களைத் திரட்டுதல் என்பவற்றுடன் புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை ஆராய்வதற்காக ஆய்வு மற்றும் அபிவிருத்தி உதவியினையும் வழங்குகின்றது.

2019 இல், நிலைபெறுதகு வலு அதிகார சபை மூன்று திட்டங்களில் முன்னிறுத்தியது. இவை புதுப்பிக்கத்தக்க வலு விழிப்புணர்வினை அதிகரித்தல், மின்சார உருவாக்கம் மற்றும் CoP21 பாரிஸ் உடன்படிக்கை நோக்கிய தயார்நிலை என்பனவாகும். இவை வெளியேற்ற குறைப்பிலான முன்னேற்பாடு வேலையூடாக மற்றும் ஓர் விரிவான அறிக்கையிடல் முறையினூடாக கண்காணிப்பு, அறிக்கையிடல் மற்றும் வெளியிடல் குறைப்பு சரிபார்த்தல் என்பனவாகும்.

### மின்சார விநியோக நம்பகத்தன்மை மேம்படுத்தலுக்கு துணையளித்தல் திட்டம்

பங்காளிகள்: இ.மி.ச., லெக்கோ, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை (தே.நி.வ.வ.ச.)

கொடையாளி முகவர் : ஆசிய அபிவிருத்தி வங்கி

குறிக்கோள்கள் :

- சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகள் மற்றும் கிராமிய சமூகத்திற்கான ஆக்கவளமுடைய வலு பயன்பாட்டிற்கு உதவுதல்
- உள்ளூர் சமூகங்களில் வாழ்வாதாரங்களை மேம்படுத்தல்

இடம் : வட மாகாணத்தின் யாழ்ப்பாணப் பகுதி (நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவு)

நடவடிக்கைகள் :

i. மின்சார உபகரணங்களது பாதுகாப்பான பயன்பாட்டில் பயிற்சியளித்தல்

ii. மின்சார அணுக்கத்துடன் வெளித்தோன்றும் வருமான வாய்ப்புக்களின் ஆக்கவளமுடைய பயன்பாட்டில் பயிற்சியளித்தல்

iii. பராமரித்தல், கலப்பு புதுப்பிக்கத்தக்க வலு முறைமைகளின் செயற்பாடு மற்றும் ஏனைய வசதிகளில் வேலைவாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும்

iv. மேலதிக உட்கட்டமைப்பினை விருத்திசெய்தல்

### திட்ட விளைவுகள்

இத்திட்டமானது இவ்வருடத்தில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டதுடன் ஆரம்ப முன்னீட்டாய்வு தள விஜயம் ஆலோசகர்களினால் நிறைவுசெய்யப்பட்டது. நிலைபெறுதகு வலு அதிகார சபையின் இலக்குகளுக்கு ஒத்தாற்போல் மற்றும் திட்ட குறிக்கோளுக்கேற்றாற்போல் ஒரு சமூக பொருளாதார மதிப்பாய்வு முன்னோடி பரிசீலனையானது இத்திட்டத்திலிருந்து நலனடையும் பொருத்தமான சமூகங்களை இனங்காண்பதற்காக நிறைவு செய்யப்பட்டது.

இத்திட்டமானது விசேடமாக அவர்களது வலுத் தேவைகள் போதுமானளவு சந்திக்கப்படாமலும் மற்றும் அலைசெலுத்தும் சவால்களுக்கு முகங்கொடுக்கும் சிறிய தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளை இலக்குவைக்கின்றது. இதற்கும் மேலாக, புதுப்பிக்கத்தக்க வலு வளங்களை பயன்படுத்துதல் மற்றும் அவற்றின் பொருளாதார நலன்கள் பற்றிய வாய்ப்புக்கள் மற்றும் அனுகூலங்களில் சமூகங்களை கற்பித்தல்.

வதிவீட்டாளர்களின் தேவைகள் மற்றும் புதிய மின்சார உட்கட்டமைப்பிலிருந்தான அவர்களது எதிர்பார்ப்புக்களில் ஆரம்ப உள்ளுணர்வுகள் திரட்டப்பட்டன. இது முதலாவது மற்றும் இரண்டாவது வருமான உருவாக்கல் வாய்ப்புக்களை படமிடல் செயலமர்வுகளுடன் பின்தொடர்ந்து இந்த திட்டத்தினூடாக சமூகத்திற்கான பொருளாதார நலன்கள் மற்றும் சாத்தியம் என்பவற்றினை இனங்காணும் நோக்கினைக் கொண்டது. இது நிறைவுசெய்யப்பட்டது. ஓர் முன்னோடி சமூக திரட்டல் கலந்துரையாடல்களும் அதன்பின்னர் நிறைவுசெய்யப்பட்டன.

### வலு உருவாக்கம் மற்றும் இறுதி பயன்பாட்டில் பொருத்தமான தடுப்பு செயற்பாடுகள் (நாமா திட்டம்)

பங்காளிகள் : சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் கீழ் உள்ள காலநிலை மாற்றம் செயலகம் (கா.மா.செ.)

கொடையாளி முகவர் : UNDP/GEF

குறிக்கோள்கள்:

இலங்கை அரசாங்கத்தின் பசுமை இல்லா வாயு தடுப்பு இலக்குகளை அடைவதற்கான முயற்சிகளுக்கு துணைபுரிவதற்கு வலு உருவாக்கம் மற்றும் இறுதி பயன்பாடு துறைகளில் பொருத்தமான காலநிலை மாற்ற தடுப்பு செயற்பாடுகளுக்கு துணைபுரிவதற்கு.

காலவெளி : ஜூலை 2015 முதல் டிசம்பர் 2019 வரை

இத்திட்டமானது 2019 இல் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டதுடன் அதன் வலு மற்றும் பசுமை இல்லா வாயு உமிழ்வு குறைத்தல் இலக்குகளை சந்தித்துள்ளது. இது வலு உருவாக்கம் மற்றும் இறுதிப் பயன்பாட்டுத் துறைகளில் 3 நாமாஸ்களை இலக்குவைத்தது. திட்ட அமுலாக்கலானது மின்கலன் தேக்கத்துடனான சூரியசக்தி ஒளிமின்னழுத்த நிறுவுதலை முன்னிறுத்தியதுடன், இது புதைபடிம எரிபொருள் அடிப்படையிலான மின்சார உருவாக்கத்திலிருந்து எழும் உமிழ் உருவாக்கத்தினை குறைக்கும்.

பசுமை இல்லா வாயு உமிழ்வுகளை குறைப்பதற்கான சாத்தியமுள்ள துறைகளை இனங்கண்டதன் பின்னர், இத்திட்டமானது தேயிலைத் தொழிற்சாலைகளை இலக்குவைத்ததுடன் அவை மின்சார சேமிப்பினூடாக குறைவான உமிழ்வினை உருவாக்கும். உயர்ந்த பசுமை இல்லா வாயு உமிழ்வு வலு உருவாக்கத்திலிருந்து மாற்றுநிலை அடைவதனை ஊக்குவிப்பதற்கான ஓர் வழிவகையாக இத்திட்டமானது உயிர்க்கூள வளிமத்தினை உற்பத்திசெய்வதற்காக உயிர்க்கூள வளிம செரிப்பிகளில் (8 முதல் 15 $m^3$ வரையான மாறுபடும் அளவுகளில்) உமிழ்வு குறைப்பிற்காக நீர்ம எரிவளியினை ஈடுசெய்வதற்காக முதலீடு செய்தது.

### திட்ட விளைவுகள்

**பசுமை இல்லா வாயுவை குறைத்தல்**

- இந்த திட்டத்தினூடாக இலக்குவைக்கப்பட்ட பசுமை இல்ல வாயு உமிழ்வு குறைத்தலில் 79% (12,766 tCO2eq) இனையும் இலக்குவைக்கப்பட்ட வலு சேமிப்புகளில் 93% (69,989 GJ) இனையும் அடைந்தது.
  - மின்கல தேக்கத்துடனான சூரியசக்தி ஒளிமின்னழுத்தம் - 101 tCO2eq (23%)

# கொடையாளி நிதியளிக்கப்பட்ட திட்டங்கள்

- உயர் செயற்திறன் மின்னோட்டி (உ.செ.மி.) மற்றும் மாற்றமடையும் அலைவெண் இயக்கிகள் (மா.அ.இ.) - 4,355 tCO2eq (100%)
- உயிர்க்கூள வளிம செரிப்பிகள் - 8,309 tCO2eq (73%)

**புதுப்பிக்கத்தக்க வலு தரவு கைப்பற்றுதல் மற்றும் அறிக்கையிடல்**

- எனர்ஜிஸ் (EnerGIS) எனப்படும் ஓர் இணைய அடித்தளமான செயலி இத்திட்டத்தினால் உருவாக்கப்பட்டதுடன் இது இ.நி.வ.அ.ச. இனால் முகாமைப்படுத்தப்படுகின்றது. இது சம்மதித்த MRV முறைகளை பயன்படுத்துவதுடன் மற்றும் இது தேசிய மற்றும் மாகாண வலு மற்றும் பசுமை இல்லா வாயு உமிழ்வு அடிநிலை இருப்புக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது மாகாணரீதியான ஆளணியினர் மற்றும் தனியார் துறை நிறுவனங்களினால் நுகரப்படும் இறுதிப் பயன்பாடு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு உருவாக்கத்தை கைப்பற்றுவதற்கும் மற்றும் பதிவு செய்வதற்குமாகும்.
- வலு உருவாக்கம் மற்றும் இறுதிப் பயன்பாட்டு துறைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட தேசியரீதியாக பொருத்தமான தடுப்பு காரியங்கள் (நமாஸ்) இனங்காணப்பட்டதுடன் அவை இ.நி.வ.அ.ச. மற்றும் CCS உள்ளடங்கலாக வலுத்துறை பங்காளிகளுக்காக (விளிம்புநிலை தணிப்பு கிரய வளைவு) வி.த.கி.வ. பகுப்பாய்வு மற்றும் பன்முக-வரன்முறை பகுப்பாய்வுகளின் கூட்டான விளைவுகளை பயன்படுத்தி வடிவமைக்கப்பட்டது.

**தொழில்நுட்ப உறுதுணை மற்றும் பயிற்சி**

- பல தேயிலை தோட்ட நிறுவனங்கள், உயிரிய வளிம நிறுவிகள், சூரியசக்தி ஒளிமின்னழுத்த நிறுவிகள் மற்றும் மாகாண மட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் நாமா மேற்பார்வை உடனான ஆளணியினர் உள்ளடங்களாக தனியார் மற்றும் அரச துறை நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட நாமாஸ்களை அமுல்படுத்தியுள்ளார்கள். இவை இலங்கையின் மனமுவந்த தடுப்பு இலக்குகளுக்கு பங்களிப்பு செய்துள்ளதுடன் அந்த நிறுவனங்களுக்கு புதுப்பிக்கத்தக்க வலு மற்றும் இறுதிப் பயன்பாடு வலு துறைகளில் நாமாஸ் அமுல்படுத்துவதற்கு அவசியமான அனுபவம் மற்றும் நம்பகத்தன்மை வழங்கப்படுகின்றது.
- நாமா திட்டச் செயலாக்க செயல்முறைக்கான ஓர் நிறுவன வரம்புறுகையிலிருந்து விளைவித்த மெய்யான பசுமை இல்ல வாயு உமிழ்வு குறைப்பின் துல்லியமான அளவீடுகள் மற்றும் கணக்கீட்டிற்காக கருவிகள் மற்றும் நிபுணத்துவம் என்பன வழங்கப்பட்டன. ஓர் MRV வரம்புறுகையினூடாக மெய்யான பசுமை இல்ல வாயு உமிழ்வு குறைப்பின் ஓர் நிறுவப்பட்ட நாமா பதிவீடு மற்றும் கணக்கீடும் விளைவிக்கப்பட்டது. மாகாண மட்டத்திலான ஆளணியினர் மற்றும் கள அலுவலர்கள், சூரியசக்தி ஒளிமின்னழுத்த நிறுவிகள் மற்றும் உயிரிய வளிம நிபுணர்கள் மற்றும் CCS ஆளணியினர் ஆகியோரூடாக நிபுணத்துவம் கிடைக்கப்பெறுகின்றது.

### மின்சார முச்சக்கரவண்டி முன்னோடித்திட்டம்

ஓர் வலு வளமாக கிடைக்கக்கூடிய புதைபடிம எரிபொருளின் கிடைப்புத்தன்மையானது, அதிகரித்த கேள்விக்கு இணையாக கிடைப்புத்தன்மை காணப்படாததன் காரணமாக குறைவடைந்துகொண்டு வருகின்றது. புதிய எண்ணெய் கண்டுபிடிப்புகள் மற்றும் நுகர்விற்கு இடையேயான விரிவடையும் இடைவெளி மற்றும் உலகின் அதி உச்ச எண்ணெய் உற்பத்தியினை எட்டியமை என்பன போக்குவரத்துத் துறையிலிருந்தான அதிகரித்த கேள்வி காரணம் என்பதுடன் வளி மாசடைதலுக்கு இது முக்கிய பங்களிப்பினையும் செய்கின்றது.

இலங்கையின் நிலைமை வேறுபட்டதல்ல. இலங்கையில் அண்ணளவாக 1 மில்லியன் முச்சக்கர வண்டிகள் உள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த முச்சக்கர வண்டிகள் 4 மற்றும் 2 வீச்சு எரிபொறிகளினால் இயக்கப்படுவதுடன் இங்கு சுழல்தண்டு சுழல்வதன் மூலம் உந்துதண்டு வலுவினை கடத்துகின்றது.

இவை வழக்கமாக டீசல் மூலம் வலுவளிக்கப்படுவதுடன் உயர்ந்த பசுமை இல்லா வாயு உமிழ்தலின் (GHG emission) காரணமாக உமிழ்வு பரிசீலனையில் தேர்ச்சியடைதல் மிகவும் சிரமமாகும். இவற்றை பராமரிப்பதும் செலவு கூடியதாகும். அரசாங்கமானது முச்சக்கரவண்டி இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதற்கு சிந்திக்கின்றது.

இலத்திரணியல் முச்சக்கர வண்டியானது இயந்திர பராமரிப்பு அல்லது உமிழ்வு பரிசீலனை மற்றும் பூச்சிய பராமரிப்பு செலவினத்தை உடையதுடன் இது வருடாந்தம் 1,000 டொலர்களை பணரீதியாக நன்மையடைகின்றது. நிலைபெறுதகு வலு அதிகார சபையானது கொரியாவின் வலு முகவரிடமிருந்து ஐந்து முச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொண்டுள்ளதுடன் இவை ஓர் காட்சிவிளக்க திட்டமாக BMICH இல் வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் வீதிகளில் முச்சக்கர வண்டிகளினால் வெளியேற்றப்படும் உயர்ந்த பசுமை இல்ல வாயு உமிழ்விற்கும் உயர்ந்த கிரயத்திற்கும் ஓர் தீர்வாக இந்த இலத்திரணியல் முச்சக்கர வண்டி நிரூபிக்கும்.





## உயிர்க்கூளம்

# 43.5 MW

## திட்டங்களின் எண்ணிக்கை

# 12

விவசாய எச்சங்களிலிருந்து உருவாக்கப்படக்கூடிய வலு மூலமாக உயர்ந்த சாத்தியமுடைய உயிர்க்கூளம் மரவியலாக ஆராயப்பட்டுக்கொண்டுள்ளது. இது வலு வள படமிடல் முன்னெடுப்பின் கீழ் நடைபெறுகின்றது.





# மனித வள அபிவிருத்தி

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலு மேடையில் ஓர் திடமான வளர்ச்சியினை உறுதிசெய்யும் ஓர் வழிமுறையாக உள்வாரியாக மற்றும் வெளிவாரியாக நிலைபெறுதகு வலு அதிகார சபையானது தொடர்ச்சியாக புதுப்பிக்கத்தக்க வலுத் துறை பங்காளிகளில் முதலீடு செய்துள்ளது. அதிகார சபையானது பின்வருவனவற்றிற்கான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. தொழில்நுட்ப மாற்றல்கள், அறிவு மாற்றல்கள், கொள்திறன் அபிவிருத்தி மற்றும் நீடிப்புத்திறனுள்ள வலுக் கோளத்தில் அதிகரித்த வெளிப்பாடு மற்றும் பயிற்சி என்பனவாகும். இது அதிகார சபையின் மனித வள அபிவிருத்தி பொறுப்பாணையின் முக்கிய முன்னுரிமைகளினுள் ஒன்றாகும். இது நாட்டில் நீடிப்புத்திறனுடைய வலு திட்டத்தின் அதிகரிப்பு நோக்கி பெருமளவு பங்களித்துள்ளது.




*வலு செயற்திறனான மற்றும் பசுமை கட்டிடங்களில் தெற்கு - தெற்கு அறிவுப் பரிமாற்றக நிகழ்ச்சித்திட்டம், சியோல், தென் கொரியா*

### உள்வாரி மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

உலகளாவிய நீடிப்புத்திறனுடைய வலு அபிவிருத்தி போக்குகளுடன் அவர்களது அறிவு மற்றும் வெளிப்பாட்டினை மேம்படுத்துவதனை நோக்காகக்கொண்டு நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் பணியாட்டொகுதிக்கு பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

அதியுயர்ந்த நலன்களுடன் இலங்கையின் நிலத்தோற்றத்தில் அமுல்படுத்தக்கூடிய சாத்தியமான புதுப்பிக்கத்தக்க வலு திட்டங்களை இனங்காண்பதனை முன்னிறுத்தி பொறியியலாளர்கள் மற்றும் திட்ட திட்டமிடுபவர்கள் ஆகியோருக்கு வெளிநாட்டு பயிற்றுவித்தல் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

சூரியசக்தி மற்றும் காற்று வலு, கரைகடந்த காற்று வலு, பசுமை கட்டிடங்கள், கேள்விப் பக்க வலு செயற்திறன் மற்றும் திட்ட நிதியளிக்கப்பட்ட வலு ஒப்பந்தங்களில் வெளிநாட்டு பயிற்சி வழங்கப்பட்டதுடன் உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் கொள்முதல் செயல்முறைகள், மேம்படுத்தப்பட்ட மென்பொருள் திறன்கள் மற்றும் உள்வாரி கணக்காய்வு திட்டமிடல் என்பவற்றில் வழங்கப்பட்டன.



*கரைகடந்த காற்று வலு திட்டம், ஐக்கிய இராச்சியம்*



*காற்று வள மதிப்பீடு மற்றும் காற்று பண்ணை திட்டமிடல், காற்று வலுவின் தேசிய நிருவகம், இந்தியா*

# மனித வள அபிவிருத்தி

## எமது பணியாட்டொகுதி

தேசிய நீடிப்புத்திறனுடைய வலு இலக்குகளை அடைவதில் பணியாட்டொகுதியினரின் பங்களிப்பில் அதிகார சபையானது மிகவும் பெருமிதமடைகின்றது.

எமது பணியாட்டொகுதி தொகுப்பானது வலு திட்ட அங்கீகாரங்கள், மேற்பார்வை, அமுலாக்கல், மதிப்பீடு, ஆய்வு மற்றும் தள உறுதுணை என்பன சர்வதேச மற்றும் உள்ளூர் நீடிப்புத்திறன் வலு முதலீட்டாளர்களுக்கு கிடைக்கப்பெறுவதனை உறுதிசெய்கின்றது.

### இ.நீ.வ.அ.ச. பணியாட்டொகுதி வரைபடம்






# செயல் திட்டம் 2020

பசுமை இல்லா வாயு (ப.இ.வா.) வெளிப்படுத்தலினை குறைக்கும் முயற்சிகளுக்கு தேசியரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் (தே.தீ.ப.), காலநிலை மாற்றத்திலான ஐக்கிய நாடுகள் வரம்புறுகை மாநாட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் தே.தீ.ப. இலக்குகள் 2020-2030 காலப்பகுதிக்கு பிரகடணம் செய்யப்பட்டன.

இலங்கை அரசாங்கமானது நாட்டின் அபிவிருத்தி திட்டங்களை ஐக்கிய நாடுகளினால் நிர்ணயிக்கப்பட்ட நீடிப்புத்திறன் அபிவிருத்தி இலக்குகளுக்கு அமைய சீரமைப்பதற்கு கடப்பாடுடையதாயுள்ளது. கூட்டாண்மைத் திட்டமானது தேசிய மற்றும் சர்வதேச நீடிப்புத்திறனுடைய வலு அபிவிருத்தி தேவைப்பாடுகளை கவனத்திலெடுத்து விருத்திசெய்யப்பட்டுள்ளது. இது 2020-2025 காலப்பகுதியில் இ.நி.வ.அ.ச. இன் நீடிப்புத்திறன்மிக்க வலு அபிவிருத்தி திட்டங்களை சீராக்குவதில் முன்னிலைப்படுத்தப்பட்டு 2030 நீடிப்புத்திறன்மிக்க வலு இலக்குகளை அடைவதை நோக்காகக் கொண்டிருந்தது.

நிலைபெறுதகு வலு அதிகார சபை மின்சக்தி மற்றும் வலு அமைச்சுடன் இணைந்து, ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்ற மாநாட்டிற்கு மேற்கொண்ட கடப்பாடுகளை அடைவது நோக்கிய இலக்கினை உடையதாக தேசிய புதுப்பிக்கத்தக்க வலு மூலோபாயத்தினை நிறுவியுள்ளது. அரசாங்கமானது நாடு பூராவுமுள்ள அனைத்து பிரஜைகளுக்கும் நம்பகமான, கட்டுப்படியாகக்கூடிய மற்றும் சுத்தமான வலுவினை பெற்றுக்கொள்வதனை நோக்காகக் கொண்டுள்ளது.

| வெள்ள நிவாரணக் கடன் | 319,645 | 804,796 |
| | 13,467,584 | 14,022,477 |
| **மொத்த ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | 33,993,375 | 31,225,640 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### குறிப்பு 16 - காசும் காசுக்குச் சமமானவைகளும்

| *டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது* | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|
| தே.சே.வ. சேமிப்புக் கணக்கு - 100610493406 | 180,115,763 | 173,410,145 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 078100188503576 | 4,227,731 | 25,214,869 |
| மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 078100278503576 | 4,620,072 | 4,620,071 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 8002630 | 2,697,932 | 933,764 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 74944408 | 48,209,002 | 76,202,054 |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு - 75803419 | 185,208,026 | 134,548,641 |
| இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கு - 80595356 | 12,235,101 | 37,878,950 |
| **மொத்தம்** | 437,313,627 | 452,808,494 |

### குறிப்பு 17 - திரண்ட நிதியம்

30 செப்டம்பர் 2007 இல் உள்ளவாறான சக்தி பாதுகாப்பு நிதியத்தின் (ச.பா.நி.) திரண்ட நிதியமானது இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு (இ.நி.வ.அ.ச.) மாற்றல் செய்யப்பட்டது. அது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

| *டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது* | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|
| 30 செப்டம்பர் 2007 இல் உள்ளவாறான திரண்ட நிதியம் | 7,076,392 | 7,076,392 |
| ஆரம்ப மூலதனம் | 5,000,000 | 5,000,000 |
| மூலதன மானியம் - எரிபொருள் மின்சக்தி அமைச்சு | 5,761,145 | 5,761,145 |
| UNDP இலிருந்தான மூலதன மானியம் | 3,612,560 | 3,612,560 |
| கொடை மானியம் - உணவு மற்றும் விவசாய நிறுவனம் | 650,239 | 650,239 |
| **மொத்தம்** | 22,100,336 | 22,100,336 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு 18 - ஒத்திவைக்கப்பட்ட மானியம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|---|
| மூலதன மானியம் 2008 | | 33,770,435 | 33,770,435 |
| மூலதன மானியம் 2009 | | 11,955,533 | 11,955,533 |
| வெளிநாட்டு மானியம் 2009 | - ஜப்பான் | 24,165,380 | 24,165,380 |
| மூலதன மானியம் 2010 | - அம்பாந்தோட்டை சூரிய சக்தி பூங்கா | 46,693,991 | 46,693,991 |
| | - பெறுமதி குறைக்கப்படாத மூலதன மானியம் | 10,646,819 | 10,646,819 |
| வெளிநாட்டு மானியம் 2010 | - ஜப்பான் | 11,419,569 | 11,419,569 |
| மூலதன மானியம் 2011 | - இந்துராண சிறிய நீர்மின் வலு திட்டம் | 15,523,945 | 15,523,945 |
| | - பெறுமதி குறைக்கப்படாத மூலதன மானியம் | 68,798,341 | 68,798,341 |
| வெளிநாட்டு மானியம் 2011 | - ஜப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 |
| | - கொரியா | 191,097,075 | 191,097,075 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2012 | - ஆசிய அபிவிருத்தி வங்கி | 15,082,346 | 15,082,346 |
| மூலதன மானியம் 2012 | | 23,581,236 | 23,581,236 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2013 | - ஆசிய அபிவிருத்தி வங்கி | 43,416,071 | 43,416,071 |
| ஒத்திவைக்கப்பட்ட மானியம் 2013 | - KOICA | 35,662 | 35,662 |
| மூலதன மானியம் 2013 | - FARDF | 41,873,961 | 41,873,961 |
| மூலதன மானியம் 2014 | | 20,487,827 | 20,487,827 |
| மூலதன மானியம் 2015 | | 14,655,015 | 14,655,015 |
| மூலதன மானியம் 2016 | | 17,855,251 | 17,855,251 |
| மூலதன மானியம் 2017 | | 19,806,619 | 19,806,619 |
| கழி: | | | |
| | - ஒத்திவைக்கப்பட்ட வருவாய் முன்னைய ஆண்டுகள் | (1,342,034,511) | (957,038,514) |
| | - ஆண்டிற்கான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் | (43,350,681) | (350,329,330) |
| **மொத்தம்** | | 380,496,286 | 423,846,967 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு 19 - ஏனைய செலுத்தவேண்டியவை

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|
| ஸ்விட்ச் ஏசியா கட்டுப்பாட்டுக் கணக்கு | 4,548,176 | 4,548,176 |
| எரிபொருள் மற்றும் மின்சக்தி அமைச்சு | 500 | 500 |
| அட்டுறுச் செலவினங்கள் | 10,855,691 | 2,508,909 |
| சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 1,260,442 | 1,282,665 |
| புதுப்பிக்கத்தக்க சக்தி சூரிய வலு பதிவீட்டுக் கட்டணங்கள் | 295,860 | 295,860 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 470,000 | 470,000 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 2,274,976 | 2,058,636 |
| செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி | 1,922,152 | 3,782,610 |
| செலுத்தவேண்டிய பிடித்து வைத்தல் வரி | 379,602 | |
| செலுத்தவேண்டிய முத்திரைத் தீர்வை | 7,675 | |
| ஜீவ சக்தி எசோசியேட்ஸ் - அளக்கை கட்டணம் | 252,875 | 252,875 |
| ஏலத்திற்கான ஆவணம் | 20,000 | 5,000 |
| ஏனையவைகள் | 370 | |
| செலுத்தவேண்டிய ஏனைய கழித்தல் | 47,323 | |
| **கடன் கொடுத்தோர்** | | |
| புதுப்பிக்கத்தக்க சக்தி - ஈ நெட் சொலூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 1,667,500 | 1,667,500 |
| சக்தி கருவிகளின் கையகப்படுத்தல் | 326,025 | 326,025 |
| தக்கவைத்தல் | 2,249,488 | 3,168,918 |
| நாராஹேன்பிட்ட ஜாதிக பொல | 99,405 | 99,405 |
| கொன்டசிங்க கொன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | 6,465,264 | |
| **நானாவித கடன்கொடுத்தோர்** | | |
| ஸ்ரீ லங்கா ரெலிகொம் | 310,748 | 310,748 |
| நலன்புரி சங்கம் இ.நி.வ.அ.ச. | 442 | 442 |
| **மீளப்பெறத்தக்க வைப்பு** | | |
| ஈ-நெட் சொலூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 10,000 | 10,000 |
| ENL கொன்சல்ட்டன்ட் | 150,000 | 150,000 |
| சிக்மா டெக்னோலொஜீஸ் | 10,000 | 10,000 |
| ரெயின்கோ ரினிவபல் எனர்ஜி கம்பனி (பிரைவேட்) லிமிட்டட் | 30,000 | 30,000 |
| விதுல்கா எக்சிபிஷன் | 9,256 | 9,256 |
| சிலோன் பெற்றோலியம் கோர்ப்பரேஷன் | 54,000 | 54,000 |
| மீளப்பெறத்தக்க வைப்பு - வாகனம் | 14,000 | 14,000 |
| ATA இன்டர்நேஷனல் | 50,000 | 50,000 |
| விதுல்கா சிம்போசியம் - என்டர்டேன்மன்ட் லிமிட்டட் | 25,000 | 25,000 |
| **மொத்தம்** | 33,806,770 | 21,130,525 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு 20 - இலங்கை சக்தி நிதியம்

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது | குறிப்பு | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|---|
| **31.12.2019 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** | | | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | | | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இ.ச.நி. நடைமுறைக் கணக்கு (FOA) - எனர்ஜி பிளஸ் பிள்டிங் | | 48,678,878 | 48,678,878 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | | | |
| தே.சே.வ. சேமிப்புக் கணக்கு | | 180,115,763 | 173,410,145 |
| இலங்கை வங்கி சேமிப்புக் கணக்கு | | 185,208,026 | 134,548,641 |
| | | 414,002,667 | 356,637,664 |
| திரண்ட நிதியம் | | 335,605,770 | 332,842,789 |
| ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை | | 35,297,205 | 2,762,982 |
| மொத்த திரண்ட நிதியம் | | 370,902,975 | 335,605,771 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| இ.ச.நி. நடைமுறைக் கணக்கு (FOA) | | 43,099,692 | 16,368,808 |
| செலுத்தவேண்டிய பெறுமதி சேர்த்தல் வரி | | | 4,663,085 |
| **மொத்தம்** | | 414,002,667 | 356,637,664 |
| **வருமானம்** | | | |
| வருமானம் - சக்தி நிதியம் | 9 | 44,628,149 | 24,346,730 |
| **செலவினங்கள்** | | | |
| வளங்கள் ஒதுக்கீடு மற்றும் அபிவிருத்தி | | | 823,590 |
| மாகாண சக்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | 3,326,188 |
| அம்பாந்தோட்டை தளத்தின் செயற்பாடு | | 7,276,625 | 5,348,808 |
| இந்துராண தளத்தின் செயற்பாடு | | | 5,392,059 |
| பூநகரி சக்தி பூங்கா | | | 1,470,600 |
| நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துதல் | | | 1,200,000 |
| சக்தி கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் | | | 1,053,326 |
| ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் | | 2,054,319 | 2,969,177 |
| | | 9,330,944 | 21,583,748 |
| **மிகை/பற்றாக்குறை** | | 35,297,205 | 2,762,982 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு 21 - இலங்கை நிலைபெறுதகு உத்தரவாத நிதியம்

| *டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது* | 2019<br>ரூபா | 2018<br>மீள் எடுத்துரைக்கப்பட்டது<br>ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| வட்டி வருமானம் - நிலையான வைப்பு | 3,405,343 | 3,401,099 |
| வட்டி வருமானம் - திறைசேரி முறிகள் | 5,738,565 | 5,347,045 |
| **மொத்த வருமானம்** | 9,143,908 | 8,748,144 |
| **கழி:** | | |
| செலவினங்கள் | - | - |
| | | - |
| **மொத்த செலவினங்கள்** | - | - |
| **தேறிய மிகை/பற்றாக்குறை** | 9,143,908 | 8,748,144 |

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

மமගේ අංකය / எனது இல. / My No. } POE/D/SLSEA/FS/2019/46 ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2021 ஜனவரி 13

தலைவர்
இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்ட இலக்கம் 19இன் பிரிவு 12இன் பிரகாரம், 2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குத் தேவைப்பாடுகள் மீதான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் கணக்காய்வு அறிக்கை

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, நிகர சொத்து மாற்றக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏறப் பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏறப்டும் தாக்கத்தினை தவிர, சபையின் 2019 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அ) இலங்கை கணக்கிட்டு நியம இலக்கம் 7இல் உள்ள ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் மீதான நியமத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், விமர்சனைக்குரிய ஆண்டின் இறுதியில் மதிப்பு குறைக்கப்பட்ட ஆதனம், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை தொடர்பான தகவல்கள் அவை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டிருந்தாலும் அவை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை என்பதுடன் இத்தகைய சொத்துக்களின் உத்தேச குறைபாட்டை திருத்துவது தொடர்பாக, இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் நடவடிக்கை மேறகொள்ளப்படவில்லை என்பதுடன் அவற்றை நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடவுமில்லை.

ஆ) சரத் சந்திர ராஜகருண சர்வதேச நிலையம், இந்துராண விற்காக 2017.01.09. ஆம் திகதி அன்பளிப்பு செய்யப்பட்ட 0.28 ஹெக்டயர் பரப்பு கொண்ட காணி மதிப்பிடப்படவில்லை என்பதுடன் நிதிக்கூற்றுக்ககளில் குறிப்பிடப்படவில்லை.

இ) நிதி செயலாற்றுகைக் கூற்றில், மெதுவாக நிலை மாறக்கூடிய மானிய வருமானமானது வருமானமாக ருபா. 3,221,352 ஆக குறைந்ததகாக இனங்காணப்பட்டதன் காரணமாக, விமர்சனைக்குரிய ஆண்டில் செயற்பாட்டு வருமானம் அக்குறிப்பிட்ட தொகையாக மதிப்பிடப்பட்டதுடன், மெதுவாக நிலை மாறக் கூடிய மானிய வருமானக் கணக்கின் மீதியானது நிதிக் கூற்றுக்களில் அந்த பெறுமானத்தை விட அதிகளவாக காட்டப்பட்டது.

ஈ) விலைப்பட்டியலில் உள்ள போலியான இடுகைகள் காரணமாக, விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியின் செயற்பாட்டு வருமானம் மற்றும் வலு நிதியத்திற்காக பெற்றுக் கொள்ளக் கூடிய பணம் ஆகியவை நிதிக் கூற்றுக்களில் ருபா 1,005,550 ஆல் அதிகமாக காட்டப்பட்டது.

உ) ஏற்கனவே பூரணப்படுத்தப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்றிட்டம் ரூபா 2,299,935 பெறுமதியான உபகரணம் மீதான வரியானது பல வருடங்களாக, நிதிக் கூற்றில் 'செய்யப்படும் வேலை' இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், விமர்சனைக்குரிய ஆண்டில் கணக்குகளில் சரிப்படுத்தல்களை மேற்கொள்ளவும், உறுதிப்படுத்தவும் நடவடிக்கை மெற்கொள்ளப்படவில்லை.

ஊ) ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட ஏனைய முற்பணக் கணக்கு ருபா 301,918 தொகைக் கணக்கு பிழையான முறையில் வரவிடப்பட்டிருந்ததால், முற்பணக்கு மீதான ஒரு தொகைக் கணக்கு குறைக்கப்பட்டது.

எ) புனாரியன் மின்சார செயறிட்டத்துக்க வழங்கவென கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்ட ருபா 9,192,859 தொகைக்குரிய கொடுப்பனவுக்கான உறுதிச் சீட்டுக்கள் மற்றும் உரிய ஆவணங்கள் ஆகியவை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

2

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் சபையின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். சபையை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் சபை தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலாதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

3

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேறெ காள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்ப டக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கடடுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தரப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும், உள்ளகக் கடடுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்பு டைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

  சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடரந்் தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடரந்தியங்கும் தன்மை தொடரப் ான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடரந்் தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

  இயலுமானவரை மற்றும் தேவையான எச்சந்தரப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, சபையின் பணிகளை தொடரச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

4

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

அதன் முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது சபையினது பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிறகு இணங்க சபை செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

குறிப்பிடத்தக்க கணக்காய்வு முடிவுகள், பிரதான உள்ளக முகாமைத்துவ குறைபாடுகள் மற்றும் என்னுடைய கணக்காய்விற்குள் இனங்காணப்பட்ட ஏனைய விடயங்கள் நிர்வாக தரப்பினரிடம் உரையாடப்பட்டுள்ளன.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கு முறைத் தெவைப்பாடுகளின் மீதான அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமான விஷேட ஏற்பாடுகள்

எனது அறிக்கையில் உள்ள நியம அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கம் தவிர, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பபாடுகளின் பிரகாரம் கணக்காய்வுக்காக வேண்டப்பட்ட தகவல்கள் மற்றும் விளக்ககங்களை நான் பெற்றுள்ளேன்.

2018 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1) (ஈ) (iii) இல் குறிப்பிடப்ட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்ட்ட அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்ததாக இருக்கின்றன.

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்ட இலக்கம் 19 இன் பிரிவு 6(1)(ஈ)(iv) இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களக்கானவை தவிர்ந்த என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளைக் கொண்டவை.

வழங்கப்பட்ட அதிகாரங்கள், பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மீதான பின்வரும் கூற்றுக்களில் எந்தவொன்றையும் உருவாக்குவதற்கு போதியளவிலான உண்மைகள் என்னுடைய கவனதத்திற் கொண்டு வரப்படவில்லை என்பதுடன் அவை சாதன உண்மைகளுடன் வரையறுக்கப்பட்டவை.

அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் எந்தவொரு உறுப்பினரும் எந்தவொரு விருப்பு, கட்டளை, அல்லது அல்லாவிட்டால் நிர்வாக சபையில் கொண்டு வரப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்திலும் 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், பொது வியாபார நிலமைகளுக்கு வெளியே மேற்கொள்ளவில்லை.

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

| விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் வரிசை | விளக்கம் |
|---|---|
| ------------------------------------------ | ----------------------- |
| **அ) 2007 ஆம் ஆண்டின் 35 ஆம இலக்க நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம்** | |
| பிரிவு 46(3) | 2015 தொடக்கம் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கான ஒரு அலுவலக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும், நிர்மாணத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குமாக 30 வருடங்களுக்கு ஒரு காணியை குத்தகைக்கு பெறுவதற்கு நிதியத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக வலுநிதியத்தின் முதலீட்டிலிருந்து ரூபா 48,678,878 தொகை விடுவிக்கப்பட்டது. |
| **ஆ) இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| அத்தியாயம் ‌மை இன் பந்தி இல 13.7 | ஒரு பதில் பதவிக்காக ஒரு அலுவலர் நியமன அதிகாரியால் நியமிக்கப்படாதவிடத்து மேலதிக சம்பளம் வழங்கப்படக் கூடாது என்று இருந்தும், இவ்விதி முறைக்கு முரணாக 2013 மே முதல் 2019 வரையான காலப்பகுதிக்குள் பதில் பதவிகளுக்கான பதில் முற்பணமாக ரூபா 3,714,952 தொகை செலுத்தப்பட்டதுடன், அக்காலப்பகுதிக்குள் ரூபா 5,020,000 தொகை பயண முற்பணமாகவும், ரூபா4,853,050 தொகை எரிபொருள் முற்பணமாகவும் செலுத்தப்பட்டது. |
| **இ) இலங்கை ஜனநாயக சோசலிஸ குடியரசின் நிதி ஒழுங்குகள்** | |
| (ை) நிதயியல் ஒழுங்கு 454 | உரிய விதிமுறைகளின் பிரகாரம் கையிருப்பு பொருட் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ை‌ை) நிதியியல் ஒழுங்குகள் 757(1) | விமர்சனைக்கரிய ஆண்டு முடிவில் சொத்துக்கள் பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன் அவை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ை‌ை‌ை) நிதியியல் ஒழுங்குகள் 395(இ) | அதிகார சபையால் பேணப்படும் 5 நடைமுறைக் கணக்குகள் தொடர்பான மாதாந்த வங்கி கணக்கிணக்கக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை. |

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

| | |
|---|---|
| (ளை) நிதி ஒழுங்குகள் 396(ஈ) | பெறுமானத்திற்கான காலம் கடந்த தொகையாகிய ரூபா 1,260,442 க்குரிய காலம் கடந்த தொகைக்கான நிலுவைக் காசோலை தொடர்பாக, இந்த விதிமுறையுடன் அதிகார சபை செயற்படவில்லை. |
| **ஈ) 1978 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இல 842** | சுற்றறிக்கைகளின் தேவைப்பபாடுகளுக்ககமைய மொத்த நிலையான சொத்துக்களின் பெறுமானமாகிய ரூபா 864,995,252 தொகைப் பெறுமானமுடைய நிலையான சொத்துக்களின் பதிவேடானது பேணப்படவோ இற்றைப்படுத்தப்படவோ இல்லை. |
| **உ) 2003 ஜூன் மாதம் 2 ஆம் திகதிய பொது தொழில் முயற்சி சுற்றறிக்கை இலக்கம் 12** | |
| (i) பிரிவு 6.5.1 | நிதி ஆண்டின் இறுதியில் இருந்து 60 நாட்களுக்குள் கணக்காளர் நாயகத்திற்கு நிதிக்கூற்றக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று இருந்த போதிலும், 2019ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2020 செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி சுமார் 6 மாதங்கள் கழிந்தே சமர்ப்பிக்கப்ட்டது. |
| (ii) பிரிவு 9.9 | பணிப்பாளர் சபைக்குரிய மாதாந்த மேலதிக கொடுப்பனவிற்கான விரிவான ஆவணம் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (iii) பிரிவு 5.1.1 | நிறுவன விவகாரம் தொடர்பாக குறுகிய மற்றும் நீண்ட காலத்துடனான குறைந்தது மூன்று வருட காலத்திற்கான கூட்டிணைவுத் திட்டத்தை தயாரிப்பதற்கும், உத்தேசிக்கப்ட்ட இலக்குகளை அடைவதற்காக, சாத்தியப்படக்கூடிய அவ் வழிமுறைகளின் பிரகாரம் நிறுவனத்தை வழி நடத்தவும் பணிப்பாளர் சபை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. |

7

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

| | |
|---|---|
| **ஊ)1994 ஜூன் மாதம் 4 ஆம் திகதிய பொது தொழில் முயற்சி சுற்றறிக்கை இலக்கம் 95** | சுவிட்ச் ஏசியா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐரோப்பிய யூனியனிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 7,334,354 இல் 3,135, 202 தொகையாகிய பெறுமதியானது, சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அதிகார சபையின் அனைத்து அலுவலர்களுக்கும் தொழில் முற்பணமாக வழங்கப்பட்டது. அச்சட்ட விரோதமான தொகையை உரிய அதிகாரிகள் அல்லது பொறுப்புக்கூறக்கூடிய அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| **எ) 2011 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல 28/2011** | முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறாமலும் பணிப்பாளர் சபையினுடைய அங்கீகாரத்தின் பேரிலும், 2016 ஆகஸ்ட் முதல் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் இலங்கைப் பொறியியல் சேவைக்குள் உள்வாங்கப்படாத, அதிகாரசபையின் பொறியியலாளர் பதவியினைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு தொழில் முற்பணமாக ரூபா 14,861,000 செலுத்தப்பட்டது. |

பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(உ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் வழங்கப்பட்ட எந்தவொரு விண்ணப்பிக்கக்கூடிய எழுதப்பட்ட சட்டத்திற்கோ அல்லது ஏனைய பொதுவான அல்லது விஷேட ஏற்பாடுகளுடன் அதிகார சபை இணங்கவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (எ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், அதிகார சபையானது அதனது அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை செய்ய தவறியுள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 (ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம், ஏற்றுக் கொள்ளக்கூடிய சட்டங்களுடன் இணைந்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள், அதிகார சபையின் வளங்கள், பொருளியல் ரீதியாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ளதாகவும், கொள்முதல் செய்யப்படவுமில்லை பயன்படுத்தப்படவுமில்லை.

8

3. **ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

அ) 2016 ஆம் ஆண்டில் 9மாகாணங்களுக்கும் வலய அலுவலர்கள் நிகழ்ச்சிகளுக்காக அறிவு முகாமைத்துவ செயற்றிட்டத்தின் கீழ் வலய அலுவலகங்களுக்கு மொத்தமாக ரூபா 13,348,087 வழங்கப்பட்டது. இதில் 3 மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட மொத்த முற்பணத் தொகையான ரூபா 3,765,051 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவிலாவது செலுத்தப்படவில்லை.

ஆ) பெற்றுக் கொள்ளக்கூடிய முற்பணக் கணக்கின் கீழ் உள்ளடங்கப்பட்ட ரூபா 1,094,015 தொகையானது 1 மதல் 4 வுருட காலப்பகுதிக்குள் கொண்டு வரப்படவில்லை என்பதுடன், இது தொடர்பாக அதிகார சபையானது வேறோரு முறையில் அறவிடுவதற்கு விமர்சனைக்குரிய ஆண்டு காலப் பகுதியின் இறுதியிலாவது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இ) விமர்சனைக்குரிய ஆண்டின் இறுதியில் ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் வரவுகளாக கணக்கில் காட்டப்பட்ட தொகையாகிய ரூபா 2,953,225 இல், ரூபா 277,256 ஆனது 1 தொடக்கம் 4 வருடங்கள் மற்றும் அதற்கு மெற்பட்ட 5 வருடங்களில் முறையே மீள் செலுத்தக் கூடிய வைப்பாக குறிப்பிடப்பட்டதுடன், அதிகார சபையானது இவ் விடயத்தை இவ்வருடத்தின் முடிவிலாவது தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

ஈ) விமர்சனைக்கரிய ஆண்டு காலப்பகுதியில் அதிகார சபையின் 4 பிரதான செயற்றிட்டங்களக்கான உத்தேச செலவினமும் உண்மையான செலவினமும் முறையே ரூபா 207,400,000 ஆகவும் ரூபா131,129,145 ஆகவும் இருந்தது. இதன் பிரகாரம் மொத்த ஏற்பாடுகளில் 37 வீதமான ரூபா 76,270,855 ஆனது சேமிக்கப்பட்ட தொகையாக அவதானிக்கப்பட்டது.

உ) கொரியன் வலு முகவர் நிலையத்தால் அமுல்படுத்தப்பட்ட பிரதான செயற்றிட்டத்தின் கீழ் மானியமாக அதிகார சபை பெற்றுக் கொண்ட சூரிய சக்தி மூலம் இயங்கும் 4 முச்சக்கர வண்டிகளை, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு ஒரு செயற்பாட்டு முகவராக 2019.12.13 ஆம் திகதி கையளித்தது. இருந்த போதிலும், அப்பிரதான செயற்றிட்டம் தொடர்பாக தகவல் திரட்டும் நோக்கில் எந்தவொரு ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என்பதுடன் அதே வேளை, அப் பிரதான செயற்றிட்டம் தொடர்பாக தகவல் சேகரிப்பு அல்லது அது தொடர்பான செயற்பாடுகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை. இச்செயற்றிட்டமானது எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களைக் கண்டறிவதற்காக வினைத்திறனாக பணன்படுத்தப்படவில்லை.

ஊ) பிராந்திய ஒளியூட்டல் நிலையத்தின் முகாமைத்துவம் மற்றும் சொத்துக்கள் ஆகியவை 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிலைபெறுதகு வலு அதிகார சபையால் இலங்கை மின்சார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், இது உரிய முறையில் ஒப்படைக்கப்படவில்லை. இதனால் அதிகார சபையினால் பண்டாரநாயக்க ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டப சங்கத்துக்கு செலுத்திய வாடகைத் தொகையாகிய ரூபா 8,033,270 தொகையானது 2020 ஒக்டோபர் மாதம் வரையான காலப் பகுதியிலாவது இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவில்லை.

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

எ) நிலைபெறுதகு வலு அதிகார சபையின் ஆரம்பத்திலிருந்து ஊழியர்களின் சம்பள மாற்றத்தில் ஏற்பட்ட பிழைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அறிக்கையின் படி 2007 இலிருந்து 2011ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் ஏற்பட்ட மேலதிக சம்பளக் கொடுப்பனவு மற்றும் முற்பணம் ஆகியவை ரூபா 2,171,760 ஆகும். அதிகாரசபை இப்பிரச்சினையைத் தீர்க்க குறித்த அதிகாரிகளுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை.

ஏ) நகர அகிவிருத்தி அதிகார சபை மற்றும் நிலைபெறுதகு வலு அதிகார சபை ஆகியவற்றுக்கிடையே 2015 ஜூன் 22 ம் திகதி மேற்கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக்கை இலக்கம் 631 இன்படி, பத்தரமுல்ல பகுதியில் இருந்து ரூபா 45,856,451 க்கு 30 வருட கால குத்தகைக்கு வழங்கப்பட்ட 75 பேர்சஸ் விஸ்தீரணமான காணியில் 2015 முதல் 2019 வரையான காலப் பகுதியில் ரூபா 23,290,653 தொகை செலவு மேற்கொண்டு வரைபடம் மட்டுமே வடிவமைக்கப்பட்டது என்பதுடன் கட்டமானப் பணிகள் மேற்கொள்வதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

ஐ) 2007.09.28 ஆம் திகதி மேற் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 2007 ஆம் ஆண்டில் 18 மாதத்துக்குள் ரூபா 7,956,800 தொகையானது மூன்று மூலப் பொருட்களை கொண்ட மின்சார வாகனங்களை விருத்தி செய்வதற்காக ஒரு வெளி நபருக்கு செலுத்தப்பட்டது. இருந்த போதிலும், அதிகார சபையானது நட்டத்தை ஈடு செய்வதற்கு அல்லது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 2019 டிசம்பர் 31ஆம் திகதி வரை 12வருடங்கள் தாமதமாகியும் உரிய நடவடிக்கை மேற் கொள்ளத் தவறிவிட்டது.

ஓ) 'சுவிட்ச் ஏசியா' நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட பணத்தின் மீதியாகிய ரூபா 4,548,176 தொகையானது மக்கள் வங்கியின் நடைமுறைக் கணக்கில் 2011 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டதுடன் வலு நிதியம் தொடர்பாக ரூபா 150, 000,000 க்கும் அதிகமான தொகையான பணத்தினை வினைத்திறனாக முதலீடு செய்யப்படாது பல வருடங்களாக தேசிய சேமிப்பு வங்கிக் கணக்கில் சேமிப்பாக உள்ளது.

ஔ) 2019 ஆம் ஆண்டுக்காக இந்துராண சர்வதேச அபிவிருத்தி நிலைய செயற்றிட்டத்துக்காகவென ஏற்படுத்தப்பட்ட ரூபா 17,000,000 தொகைக்குரிய ஏற்பாடானது 2019 டிசம்பர் 31 அஆம் திகதி வரை ரூபா 7,594,466 அதாவது 45 வீதத்திற்கு மெல் அதற்காக செலவு செய்யப்பட்டது. ரூபா 9,405,534 அல்லது 55 வீதமான தொகை இத்திட்டத்திற்கு செலவு செய்யப்படாமையினால் இச் செயற்றிட்டத்துக்கான எற்பாடுகள் வினைத்திறனாக பயன்படுத்தப்படவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

10

# தேசிய கணக்காய்வு அலுவலக கணக்காய்வு அறிக்கை

∴) விமர்சனைக்குரிய காலப் பகுதியில் ஒரு கணணி மயப்படுத்தப்பட்ட கணக்கியல் முறை ஊடாக கணக்கு முறையை அதிகார சபை ஆரம்பித்திருந்தாலும் இது தொடர்பாக பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பபாடுகள் ஆகியவை செயற்படுத்தப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

ஒப்பம்
டபிள்யு.பி.சி.விக்கிரமரத்ன
கணகக்காய்வாளர் நாயகம்

மேற் குறிப்பிட்ட சுருக்க அறிக்கை மொழிபெயர்ப்பானது ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையாகவும் சரியாகவும் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை இத்தால் உறுதி கூறுகின்றேன்.

**A.M. RAMEEZANA** BA Hons. HNDE
**Sworn Translator** (Tamil - Engli
Government Translators' Service - Class I
Attorney General's Department
Colombo 12. Sri Lanka.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

27.01.2021

கணக்காய்வுத் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்ல

**2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்படி, 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கு தேவைப்பாடுகள் மீதான சுருக்க அறிக்கை**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2021.01.13 ஆம் திகதி தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட கணக்காய்வுத் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்கள் இத்தால் கையளிக்கப்படுகின்றன

**1. நிதிக் கூற்றுக்கள்**

1.2 தரமான கருத்துக்கான அடிப்படை

அ) 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக போதியளவு விபரங்கள் இருக்கவில்லை. எனவே, வருட முடிவில் முற்று முழுதாக மதிப்பு குறைக்கப்பட்ட சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை அடையாளம் காண கடினமாக இருந்தபடியினால் நிதிக் கூற்றுக்களில் அதனை வெளிப்படுத்த முடியவில்லை. மேலும் அவை இன்னும் பயன்பாட்டில் உள்ளது. இருந்த போதிலும் நிறுவனத்தால் கொண்டிருக்கக் கூடிய எல்லா நிலையான சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆ) அரச நிறுவனங்களின் காணிகள் அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தால் மாத்திரமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன் இந்துரண சரத்சந்திரா ராஜகருண சர்வதேச நிலையத்துக்கான காணியை மதிப்பீடு செய்வதற்கு பல தடவைகள் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் இன்று வரை மதிப்பீட்டு அறிக்கை வழங்கப்படவில்லை.

இ) மெதுவாக மாறக் கூடிய வேறுபட்ட மானிய வருமானத்தைக் கணக்கிடும் போது ஏற்பட்ட பிழையை 2020 ஆண்டுக்கான நிதிக்கூற்றின் ஊடாக திருத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈ) பெற்றுக்கொள்ளக்கூடிய கணக்குகளில் குறிப்பிடப்பட்ட மீதியை வலு நிதியத்திற்காக பெற்றுக் கொள்ளக் கூடிய பணமாக மீள்நிரப்புதல் மற்றும் திருத்துவதற்கான ஏற்பாடுகள் 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் மேற்பொள்ளப்படுகின்றன.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

உ) இது தொடர்பாக, 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஊ) 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எ) பூநகரி மின்சார செயற்றிட்டம் தொடர்பாக உளவள சேவைகள் வழங்குவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக்கான பற்றுச் சீட்டை உடனடியாக எமது அதிகார சபையின் கணக்கியல் பிரிவிற்கு அனுப்பும் படி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குகளின் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

அ) இலங்கை வலு நிதியத்தின் குறிக்கோள்களுக்கிடையில் பொருளியல் ரீதியான மின்சார நுகர்வு, மின்சாரப் பரம்பரைக்கான உள்ளூர் வள அபிவிருத்தி மற்றும் வினைத்திறனான நுகர்வுக்கான பொதுமக்கள் உடன்பாடு ஆகியவற்றை பிரதானமாக குறிப்பிடப்பட முடியும்

அதன் பிரகாரம், நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கான பிரதான கட்டடமானது 'எனர்ஜி ப்ளஸ்' என்ற குறிக்கோளின் கீழ் பத்தரமுல்லயில் உள்ள அபே கம க்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இது பொது மக்களுக்கு ஒரு செயன்முறைப் பயிற்சி அளிப்பதன் ஊடாக பொதுமக்களை இலகுவாக வழிநடத்த முடியும். வலுப் பொருளியல் மற்றும் குறைந்த அளவிலான இயற்கை வளப் பாவனை மூலம் கட்டடங்களை உருவாக்க முடியும் என்று பொதுமக்களுக்கு காட்டுவதற்காக அமைக்கப்பட்ட ஒரு செயன்முறைக் கட்டிடம் ஆகும். இது மக்கள் வலுப்பேணுதல் முறைகளை பயன்படுத்துவதற்கான நுட்பங்களை வெற்றுக் கண்ணால் நடைமுறை ரீதியாக பார்க்கக் கூடியதான ஒரு உருவாக்கமாக இருந்தாலும் கணக்காய்வானது இக்கட்டிடத்தை "நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கான ஒரு அலுவலகத்தின் தயாரிப்பு" என பொருள் கோடியமையானது குறித்த நிதிக்கான குறிக்கோள்களுக்கு முரணாக உள்ளது. எனவே உண்மை ஆராயப்படவேண்டும் என்பதுடன் விடயம் சரியாக நம்ப வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக செலவுகளை மெற்கொள்ளப்பட முடியும் என்று அதிகார சபைச் சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்தபோதிலும், அத்தகைய "எல்லாச் செலவினங்களும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படியே ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வலு நிதியத்திலிருந்து இக்கட்டிடத்துககாக செலவு செய்யப்பட்ட தொகையானது ரூபா 48,678,878 ஆகும்.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

ஆ) 2013 ஆம் ஆண்டில் பதில் பதவிகளுக்காக அலுவலர்கள் நியமனம் தொடர்பிலான கணக்காய்வு கருத்துக்களின் படி 2020.09.22ஆம் திகதி, நியமன அதிகாரிகளாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துக்காக ஒரு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபையினால் பின்வரும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு உப பணிப்பாளர் குழு நியமிக்கப்பட்டது.

1. தலைவர் - திருமதி நயனா நாதவிதாரண - மேலதிக செயலாளர்,பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி சபை
2. உறுப்பினர் - திரு நிசாட் உபேந்திர- பணிப்பாளர் சபை உறுப்பினர்
3. உறுப்பினர் - திருடி.ஜி.விக்கிரமசிங்க - மேலதிக செயலாளர்,(நிர்வாகம்)மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சு

இது தொடர்பிலான ஒரு அறிக்கை மேற் குறிப்பிடப்பட்ட உப குழுவினூடாக வழங்கப்பட உள்ளது.

இ) (i) சொத்து மீள்மதிப்பீட்டின் பின்னர் புதிய கணணி மென்பொருளை பேணுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

(ii) சொத்துக்களின் பௌதீக உறுதிப்பாடு பூரணப்படுத்தப்பட்டது.

(iii) மாதாந்த வங்கி இணக்கக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

(iv) இது தொடர்பாக வாடிக்கையாளர்களுக்கு கடிதங்களை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஈ) சொத்து மீள்மதிப்பீட்டின் பின்னர் கணணி மென்பொருளில் பதிவு செய்யப்படும் என்பதுடன் நாளாந்தம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படும்

(உ) (i) 2019 ஆம் ஆண்டில் எமது அதிகாரசபையின் கணக்கியல் நடவடிக்கைகளை கணணிமயப்படுத்தும் செயன்முறை கணக்கியல் பிரிவின் குறைந்த அளவிலான ஊழியர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஒரே நேரத்தில் நாளேடுகளில் பதிவுகளை மேற்கொள்வதுடன் ஏடுகளைப் பேணுதல் மற்றும் கணணிக் கணக்கு முறைமைகளைப் பேணுதல் ஆகியவை ஒருகடினமான இலக்காக காணப்பட்டதுடன் அதன் காரணமாக தயாரிப்பு மற்றும் நிதி முறைமைகள் ஆகியவற்றில் தாமதம் ஏற்பட்டது. கொவிட் - 19 பரவல் நிலை காரணமாக நிதிக் கூற்று தயாரிப்பு மற்றும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. இதன் காரணமாக செப்டம்பர் 8ஆம் திகதியே கணக்காய்வாளர் நாயகத்துக்கு கணக்கறிக்கைகளை அனுப்பிவைக்கப்படக்கூடியதாக இருந்தது.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

(ii) பணிப்பாளர் சபையின் மேலதிக நேரக் கொடுப்பனவு தொடர்பாக ஒருவிரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(iii) 5வருட காலப்பகுதிக்கான ஒரு கூட்டுறவுத் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அது பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்வரும் காலப்பகுதிக்குள் நாட்டில் நிலைபெறுதகு வலு அபிவிருத்திக்காக வேண்டப்பட்ட மூலதனத்தின் மீது ஆழ்ந்த கவனம் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபையால் குறித்துரைக்கப்பட்டது. அதன் பிரகாரம், முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை முழுமையாக கண்டறிந்து நிலைபேறான வலு அபிவிருத்தி தொடர்பான சர்வதேச போக்குகளை ஆராய்வது தொடர்பாக ஆலோசனை சேவை வழங்குவதற்கு கூட்டிணைவுத் திட்டம் தற்போது தயாரிக்கப்படுகின்றது.

(ஊ) சுவிட்ச் - ஏசியா (SWITCH – Asia) நிகழ்ச்சித் திட்டத்துக்காக நிதி ஏற்பாடுகள் தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் முறையாக செயற்படுத்தப்படுவதுடன் இது அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(எ) அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டதன் பின்னர், 2019.10.29 ஆம் திகதி அமைச்சரவை அமைச்சின் செயலாளர் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை வேண்டினார். தேசிய சம்பளங்கள் மற்றும் பதவி ஆணைக்குழு அத்தகைய பரிந்துரைகளை வழங்குவதற்காக 2020.10.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் படி மின்சசக்தி மற்றும் வலு அமைச்சின் ஊடாக, 2020.06.18 ஆம் திகதி எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம், முகாமைத்துவ சேவைத் திணைக்களம் ஊடாக, 2020.08.24 ஆம் திகதிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம், பொறியியலாளர் பதவி தொடர்பான விபரங்களை எமது அமைச்சுக்கு அனுப்பியது.

**3.0 ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

அ) இது தொடர்பான விசாரணைக் கடிதங்கள் உரிய மாகாணக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இதனுடைய முற்பணத் தொகையை உடனடியாக செலுத்துவதற்கு அமைச்சினுடைய செயலாளர்களுக்கு ஒரு பிரதியுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) இத் தொகையை மீள அறவிடுவதற்காக அல்லது நாளாந்த பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கோள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

இ) இத்தகைய நிதியைத் தீர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஈ) 2019 ஆம் ஆண்டினுடைய ஆரம்பத்தில் ஏற்பாடுகளை வழங்குவதன் மூலம் அமுல் படுத்தக் கூடிய சில செயற்றிட்டங்கள் இருந்தன. அவற்றுள், வளிச் சீராக்கிகளுக்கான தரம் மற்றும் முடிவு ஆகியவற்றை அறிமுகப்படுத்துவதற்கு வளிச் சீராக்கியுடனான ஆய்வு கூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 135 மில்லியன் செலவிடுவதற்கு ஒதுக்கப்பட்டதுடன் சூரிய மின் தகடு ஆய்வு கூடத்துக்காக ரூபா 70 மில்லியன்களும் உயிரினத் தொகுதி செயற்றிட்டத்துக்காக ரூபா 120 மில்லியன்களும் ஒதுக்கப்பட்டது.

உ) 2019 ஆம் ஆண்டு இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதும் ஒரு சாதாரண சூழ்நிலையில் 2020 ஆண்டளவில் எதிர்பார்க்கக் கூடிய ஒரு முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. மேலும், இதற்குரிய பொருட்கள் ப.ச.மா.ம (BMICH) ற்கு கடிதங்கள் மூலம் வழங்கப்பட்டதுடன் அவசியமான பொறியியலாளர்களுக்கு தேவையான பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

ஊ) இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் செலவாக (ஒளியூட்டலுக்கான பிராந்திய நிலையத்தின்) ஒ.ப.நி. இன் மீதிகளை இனங்காண்பதற்கு அனுமதியை வேண்டி அமைச்சுக்கும் திறைசேரிக்கும் ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

எ) உள்வாங்குச் செயன்முறைக்கரிய ஏற்பாட்டிற்கான பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவானது மேற் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை ஒரு இலக்காக ஆராய்வதற்கும் குறித்த விடயத்தை அறிக்கையில் உள்வாங்குவதற்கும் அறிவுறுத்தப்பட்டதுடன் உரிய தொகுக்கப்பட்ட அறிக்கைக்கான அனுமதியானது 2020.09 22 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பெறப்பட்டது.

ஏ) அரசாங்க கொள்கைகளுக்கிணங்க கட்டுமானப் பணியை ஆரம்பிப்பது தொடர்பில் சிக்கல் தன்மை நிலவுகின்றது.

ஐ) அதிகார சபையானது, சட்ட மா அதிபரிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்னர், உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக, ஒரு மத்தியஸ்த செயன்முறை ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தது. அதன்படி, இச்செயற்றிட்டத்தின் இறுதி அளிப்பை மேற்கொள்வதற்கு தேசிய மத்தியஸ்த நிலைய இல SLNAC/125-06-2019 இனது மத்தியஸ்தராக ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிப்பதற்கான அனுமதியை 2019.06.12 அன்று வழங்கியது. மத்தியஸ்த செயன்முறையின் விளைவாக, இப்பபிரச்சினையின் தீர்வு தொடர்பில் நிர்மாண தரப்பினரிடமிருந்து பிரேரணைகளைப் பெற்று அழைப்பாணை விடுக்கப்பட்டது. குறித்த பிரெரணைகள் முகாமைத்துவ சபைக்கு 2020.05.21 ஆம் திகதி கையளிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரிவான விளக்க அறிக்கையாக குறிக்கப்பட்ட பிரேரணைப் பட்டியலை கையளிக்குமாறு முகாமைத்துவ சபையால் அறிவிக்கப்பட்டதுடன் இந்த விடயம் உரிய தரப்பினருடன் உரையாடப்பட்டது. மேலும் ஒரு விரிவான விளக்க அறிக்கையைக் கோரும் நினைவூட்டல் அனுப்பபப்பட்டதுடன் இது கிடைத்தவுடன், முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் இவ்விடயத்தைத் தீர்ப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கணக்காய்வாளர் நாயகம் அறிக்கை - 2019 க்கான இ.நி.வ.அ.ச. யின் அவதானிப்புக்கள்

(ஓ) 'சுவிட்ச் ஏசியா' செயற்றிட்டதின் கீழ் பெற்றக் கொள்ளப்பட்ட நிதியின் ஒரு பகுதியை ஊழியர்களுக்கிடையில் பங்கிடப்பட்டமை தொடர்பாக, அந்நிதி உரிய கணக்கிற்கு இடப்பட்டதா என்பது தொடர்பாக, COPE குழுவின் முன் ஒரு கணக்காய்வு விசாரணை உள்ளது. இரந்த போதிலும், கணக்காய்வு நாயகத்தின் அறிவுறுத்தல்கள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் முதலிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஔ) இத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அதனை உரிய நிதியாண்டில் செய்வதற்கு முடியாமல் போனது. இச் செயற்றிட்டம் தற்போது பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

(ஃ) 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கணணிக் கணக்கு முறைமையைப் பயன்படுத்தி அதன்மூலமான கட்டுப்பாட்டு முறைமைகளை அமுல்படுத்தலானது அவ் வருட காலப் பகுதிக்குள் கடினமாக இருந்ததுடன் கட்டுப்பாட்டு முறைமைகளை அமுல்படுத்துவதற்கான அவசியமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கையொப்பம்

தலைவர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

மேற் குறிப்பிட்ட சுருக்க அறிக்கை மொழிபெயர்ப்பானது ஆங்கில மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு எனது அறிவுக்கு எட்டிய வகையில் உண்மையாகவும் சரியாகவும் மொழிபெயர்க்கப்பட்டது என்பதை இத்தால் உறுதி கூறுகின்றேன்.

A.M. RAMEEZANA BA Hons. HNDE
Sworn Translator (Tamil - English)
Government Translators' Service - Class I
Attorney General's Department
Colombo 12. Sri Lanka.

# கூட்டிணைப்புத் தகவல்கள்

அதிகார சபையின் பெயர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

சட்ட அந்தஸ்து

2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்


மட்டம் 5, 1வது மாடி, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு
மண்டபம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07

தொலைபேசி : 0112677445

தொலைநகல் : 0112682534

மின்னஞ்சல் : info@energy.gov.lk

இணைய தளம் : www.energy.gov.lk